16 - 31 மே 98 □ ரூ. 4.00

www.padippakam.com

தாராளமயத்தால் கைத்தறி நசிவு

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# பென்னாகரம் பகுதி இருளில்! மின்வெட்டைக் கண்டித்து ஊர்வலம் — ஆர்ப்பாட்டம்

அரசுத் தேர்வுக்குப் படிக்கும் மாணவ, மாணவியர் இருளில் தத்தளிக்கின்றனர். சிறு விவசாயிகளின் பயிர்கள் நீரின்றிக் கருகுகின்றன. அனைத்துப் பிரிவு மக்களுமே மின் வெட்டால் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு புறம் சென்னைக்கு அருகே அமைக்கப்பட்டு வரும் 'ஹூண்டாய்' கார் தொழிற்சாலைக்கும், 'ஃபோர்டு' என்ற அமெரிக்க நிறுவனத்திற்கும், சுற்றுச் சூழலை நாசமாக்கும் 'டூபாண்ட்' நிறுவனத்திற்கும் 24 மணி நேரமும் தடையற்ற மின்சாரம் வழங்குகிறது தமிழக அரசு. மறுபுறம் கிராமங்களுக்கு காலை 1 மணி நேரம், மாலை 1 மணி நேரம் மட்டுமே மின்சாரம் நிறுத்தப்படுகிறது என மந்திரி வீராசாமி திரும்பத் திரும்பக் கூறுகிறார். கூட்டணிக் கட்சியே மந்திரி கூறுவது பொய் என்ற பிறகும், அதே பொய்யை திரும்பச் சொல்கிறார். கிராமங்களில் மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும் என்று தெரியாத அளவு மின்வெட்டு உள்ளது என்பதே உண்மை.

தேசங்கடந்த தொழிற்கழகங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பை ஒளி வெள்ளத்தில் மூழ்கடிக்க, மின்சாரமின்றி நீர் பாய்ச்ச முடியாமல் நமது விவசாயிகளின் பயிர் கருகுகிறது.

பென்னாகரம் பகுதியில் பெருமளவு மின்வெட்டு இருக்கும் அவலத்தைக் கண்டித்து, பகுதி விவசாயிகள் விடுதலை முன்னணி 21.04.'98-ல் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பென்னாகரம் பேருந்து நிலையத்திலிருந்து வி.வி.மு. தோழர் ராஜன் முன்னிலை வகுக்க, தோழர் கண்ணையன் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டது.

* நிலப்பிரபுக்களுக்கு இலவச மின்சாரத்தை ரத்து செய்!

* சிறு விவசாயிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கு!

* ஒகேனக்கல் நீர் மின் திட்டத்தை நடைமுறைப்படுத்து!

என வி.வி.மு. தோழர்கள் ஊர்வலத்தில் முழக்கங்கள் எழுப்பினர். ஊர்வலம் வட்டாட்சியர் அலுவலகம் சென்று முடிந்த பின், அங்கேயே இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. தோழர்கள் சிவாஜி, சாமிக்கண்ணு, வெங்கடேசன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். வி.வி.மு. வட்ட அமைப்பாளர் தோழர் அருண் நன்றி கூற ஆர்ப்பாட்டம் முடிவடைந்தது.

— வி.வி.மு., பென்னாகரம்.

# வி.வி.மு. மீது பொய் வழக்கு! பாளையம் போலீசு - நீதிமன்ற அதிகாரிகளின் கூட்டுச் சதி!

பாளையம் வட்டப் பகுதியில் கம்பம், போடி என பல இடங்களிலும் புரட்சிகர அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணி மக்களைத் திரட்டி நியாயமான கோரிக்கைகளுக்குப் போராடி வருகிறது. பகுதி உழைப்பாளிமக்களின் தலைமைச் சக்தியாக வேரூன்றி வருகிறது. இதைக் கண்டஞ்சிய போலீசு அடக்குமுறைகளை ஏவி ஒடுக்க முனைகிறது. வி.வி.மு. மீது போடப்பட்ட பொய் வழக்குகளுக்கு கணக்கே கிடையாது.

இப்படித்தான் வாஜ்பாய் பதவி ஏற்பைக் காரணம் காட்டி, வி.வி.மு. தோழர்களை பொய் வழக்கில் சிறையில் அடைத்தது போலீசு.

வாஜ்பாய் பதவி ஏற்கும் நாளில் குண்டு வைக்க கம்பத்தில் சதித் திட்டம் தீட்டியதாக கம்பம் கிளை தோழர் வசந்தன், தேவாரத்தில் ஒரு தோழர், தே. மீனாட்சிபுரம் கிளையில் 4 தோழர்கள் என அறுவரைக் கைது செய்து சிறையிலடைத்தது போலீசு.

பிணையில் விடுவிக்கக் கோரி வழக்காடிய போது, 'மாஜிஸ்ட்ரேட்' சரவணன் 'நிபந்தனையுடன் கூடிய பிணை' அளித்து போலீசு விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார்.

இப்பகுதி போலீசு - நீதித்துறை அதிகாரிகள் கூட்டணி சேர்ந்து புரட்சிகர அமைப்பான வி.வி.மு. மீது தொடர்ந்து பொய் வழக்குப் போட்டு வருகின்றனர். இதன் மூலம் வி.வி.மு.வை அடக்கி, ஒடுக்கிவிட மனப்பால் குடிக்கின்றனர். அதிகார வர்க்கத்தின் நப்பாசை பகற்கனவாகத்தான் முடியும்.

— வி.வி.மு., பாளையம் வட்டம்.

# வட்டிக் கடைக்காரனுக்கு வாலாட்டும் நெய்வேலி போலீசு!

நெய்வேலியில் நல்லையா ஃபைனான்ஸ் என்ற வட்டிக் கடை கொடி கட்டிப் பறக்கிறது. அப்பகுதி ரவுடி தமிழ்ச்செல்வன் என்பவன் அந்த ஃபைனான்ஸ் கம்பெனிக்குச் சென்று தகராறு செய்ய, வட்டிக் கடை உரிமையாளர் மகன்கள் ரவுடியை அடித்தனர். வட்டிக்கடைக்காரர்கள் அதோடு விடாமல், அந்த ரவுடி ஏறிவந்த ஆட்டோவின் ஓட்டுநரையும் அடித்தனர்!

அடிபட்ட ஆட்டோ ஓட்டுநர் தனது சங்க தோழர்களிடம் கூற, அனைவரும் சேர்ந்து வட்டிக் கடை உரிமையாளர் மகன்களிடம், 'ஓட்டுநரை ஏன் அடித்தீர்கள்?' எனக் கேட்டனர். வட்டிக் கடைக்காரர்கள் உடனே காவல் துறைக்குத் தகவல் தந்தனர். மின்னல் வேகத்தில் நெய்வேலி வட்டம் 8 ஆய்வாளர் நாராயணசாமி தலைமையில் 20-க்கும் மேற்பட்ட போலீசு வந்தது. ஆட்டோ ஓட்டுநர்களை அடித்து உதைத்து, உள்ளாடையுடன் இழுத்துச் சென்றது. முன்னணியாளர்கள் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

இதனால் நெய்வேலி ஆட்டோ ஓட்டுநர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். அப்போதும் ஆய்வாளர் நாராயணசாமி ஆட்டோ நிறுத்தங்களுக்குச் சென்று, மிரட்டி ஆட்டோக்களை இயங்கச் செய்தார். வட்டிக் கடையின் விசுவாச ஏவல் நாயாக ஆட்டம் போடுகிறார்.

இதைக் கண்டித்து தொழிலாளர் பிரச்சாரக் குழு சுவரொட்டிகள் ஒட்டியது. மக்களிடம் அம்பலமாவதைக் கண்டு போலீசாரே நகர் முழுதும் சுவரொட்டிகளைத் தேடிக் கிழித்தனர். வட்டிக் கடை உரிமையாளரின் மகன்களில் ஒருவன் தொ.பி.கு. தோழரிடம் வந்து பேரம் பேசி மூக்குடைப்பட்டுத் திரும்பினான்.

கடலூர் மாவட்ட சிறப்புப் பிரிவு போலீசு அடிக்கடி சோதனை என்ற பெயரில் தொ.பி.கு. தோழர் பகத்சிங் வீட்டில் ரவுடித்தனம் செய்து வருவதையும், நெய்வேலி வட்டம் '8' ஆய்வாளரின் அடாவடித்தனத்தையும் கண்டித்து நெய்வேலி சி.பி.எஸ்.இல் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் சீனிவாசன் சிறப்புரை நிகழ்த்தி, போலீசு அராஜகத்தைத் தோலுரித்தார். ம.க.இ.க. கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சியுடன் கூட்டம் முடிந்தது.

— தொ.பி.கு., நெய்வேலி.



படிப்பகம்

புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 13

இதழ்: 11 - 13

16 எப்.'98 - 31 மே'98

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 4.00
ஆண்டு சந்தா: ரூ. 96.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
புதிய ஜனநாயகம்,
அஞ்சல் பெட்டி எண்: 6015,
அசோக் நகர்,
சென்னை - 600 083.


# பா.ஜ.க.வின் பொருளாதார சீர்திருத்தங்கள் புதிய மொந்தையில் பழைய கள்ளு

தாராளமயமாக்கலை நடைமுறைப்படுத்துவதில், இதற்கு முன் நாட்டை ஆண்ட காங்கிரசுக்கும், ஐக்கிய முன்னணிக்கும் தானும் சளைத்தவனல்ல எனக் காட்டிக் கொண்டு விட்டது பா.ஜ.க. இக்கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் பா.ஜ.க. காட்டி வரும் வேகம் காரணமாக, அதன் சுதேசி வேடம் ஆட்சியைப் பிடித்த ஓரிரு மாதங்களுக்குள்ளாகவே கலைந்தும் போனது. முதலில், பன்னாட்டு நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பல்வேறு ஆடம்பர அழகு சாதனப் பொருட்களுக்கு இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, அவற்றுக்கு விதிக்கப்பட்டு வந்த சுங்க வரியினைக் குறைத்தது; இதைத் தொடர்ந்து, ஏகாதிபத்தியங்களின் உள்ளூர் பங்காளிகளான தரகு முதலாளிகளுக்கும் சலுகைகளை வாரியிறைத்துள்ளது. வரவு - செலவு அறிக்கை வெளியிடப்படும் வரை கூடக் காத்திராமல், ''சி.ஐ.ஐ.'' எனப்படும் தரகு முதலாளிகள் சங்கத்தின் ஆண்டு விழாவிலேயே, தனது அரசு செயல்படுத்தவுள்ள சீர்திருத்தங்களையும், சலுகைகளையும் அறிவித்து, தனது கட்சியின் விசுவாசத்தைக் காட்டிக் கொண்டார், வாஜ்பேயி.

''அந்நிய முதலீட்டுக்கு அனுமதி வழங்குவது குறித்து விண்ணப்பம் செய்த அறுபது நாட்களுக்குள் முடிவெடுக்கப்படும்; நிகழ்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு அந்நியச் செலாவணி சட்டம் மாற்றியமைக்கப்படும்; கம்பெனி சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படும்; நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்படும்; தொழில் - வர்த்தகத்தைக் கண்காணிக்கும் நிர்வாகச் சட்டங்களில் தேவையற்றவை நீக்கப்படும்; மூலதனத் திரட்டலுக்கு தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதியும், காப்பீட்டு நிறுவனங்களின் சேமிப்பும் பயன்படுத்தப்படும்.''

''மந்தமாகி விட்ட சிமெண்ட், இரும்பு, வீட்டுமனை விற்பனையை அதிகரிப்பதற்காகவே அறுபது நாட்களுக்குள் தேசிய வீட்டு வசதிக் கொள்கையை அறிவிக்கவுள்ளது பா.ஜ.க. இதன் மூலம் நகர்ப்புறங்களில் பணப்புழக்கத்தை அதிகரிக்க முயல்கிறது.'' — இவை அனைத்தும் பா.ஜ.க. கூட்டணி அரசு கொண்டு வரவுள்ள பொருளாதார சீர்திருத்தங்கள்.

கடந்த இரண்டு வருடங்களாகவே தேங்கிக் கிடக்கும் இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த பா.ஜ.க. கையாளவுள்ள அணுகுமுறை, ஏற்கனவே காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் கையாண்டவைதான். தொழில், வர்த்தகம், நிதித் துறைகளில் மேலும் மேலும் சீர்திருத்தங்கள் செய்வதன் மூலம் இத்தேக்கத்தை உடைத்து விட முடியும் என்பதுதான் இவர்களின் ஒரே அணுகுமுறை. ஆயின் இச்சீர்திருத்தங்கள் நாட்டின் வளத்தை ஏகாதிபத்தியங்கள் கொள்ளையிட அகலத் திறந்துவிட்டு, பொருளாதாரத்தில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டில், தி.மு.க. பதவிக்கு வந்தபின், 4,000 கோடி ரூபாய்க்கும் மேலாக அந்நிய மூலதனம் நுழைந்துள்ளது. அதேபொழுதில் கடந்த ஆறே மாதத்தில் தமிழ்நாட்டில் மட்டும் 25,000 தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டு வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர். டன்லப் டயர்ஸ், பி அண்டு சி மில், ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ், அரக்கோணம் இரும்பாலை என முப்பதுக்கும் மேற்பட்ட பெரிய தொழிற்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. தென் கிழக்காசிய பொருளாதாரச் சரிவு திருப்பூர் பின்னலாடைத் தொழிலிலும், கோவை நூற்பாலைகளிலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. நாட்டின் மிக முக்கிய தொழிற்துறை மையங்களான மும்பையிலும், கல்கத்தாவிலும்கூட இதுதான் நிலைமை.

பன்னாட்டு நிறுவனங்களின் படையெடுப்பு, ஏற்றுமதி - இறக்குமதி மற்றும் தொழிற் கொள்கைகளில் செய்யப்பட்ட மாற்றங்கள் காரணமாக நாடெங்கும் 2,62,376 சிறு தொழில்கள் நலிவடைந்து போயுள்ளன. இந்நிறுவனங்களில் வேலை பார்க்கும் 1.5 கோடி தொழிலாளர்களின் வாழ்வு கேள்விக்குறியாகி நிற்கிறது. தாராளமயமாக்கலினால் விவசாயம் புறக்கணிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு அரசு கடன் வழங்குவது குறைந்து போனதால்தான் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா, உத்திரப்பிரதேசத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ள நேரிட்டது.

இப்படிப்பட்ட பாதகமான தருணத்தில், பா.ஜ.க. அறிவித்துள்ள பொருளாதாரக் கொள்கையில் விவசாய முதலீடு பற்றி ஒரு வார்த்தைகூட கிடையாது; நலிவடைந்துள்ள சிறு தொழில்கள் பற்றியும், மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறப்பது பற்றியும் கூட பா.ஜ.க. அக்கறை செலுத்தவில்லை. மாறாக, ஏகாதிபத்தியங்களின், தரகு முதலாளிகளின் நலன்களைக் காப்பதுதான் தனது குறிக்கோள் என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டுவிட்டது. வாய்ப்புக் கிடைத்தால், ''வங்கி - காப்பீடு துறைகளைத் தனியார்மயமாக்க வேண்டும்; ரூபாயின் மதிப்பை சந்தை தீர்மானிக்கும்படி விட்டுவிட வேண்டும்'' என்ற ஏகாதிபத்தியங்களின் நீண்ட நாள் ஏக்கத்தைத் தீர்த்து வைக்கவும் தயங்காது இப்போலி சுதேசிக் கும்பல்.

பாரதீய ஜனதாவின் அரசியல் எதிரியான காங்கிரசு, இப்பொருளாதார சீர்திருத்தங்களை நேரடியாகவே வரவேற்றுள்ளது. வலது - இடது போலி கம்யூனிஸ்டுகளோ இதனை எதிர்த்து சடங்குத்தனமான அறிக்கையொன்றை பத்திரிகைகளில் கொடுத்துவிட்டு முடங்கிக் கொண்டனர். காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து, பா.ஜ.க.வைக் கவிழ்த்துவிட்டு, அதிகாரத்தைக் கைப்பற்றி விட வேண்டும் என்ற நாற்காலி அரசியல்தான் இப்பொழுது போலிகளின் ஒரே இலட்சியம்.

சுருக்கமாகச் சொன்னால், பல்வேறு ஓட்டுக் கட்சிகளிடையேயும் தாராளமயமாக்கலைத் தடையின்றி நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடும் கிடையாது. சர்வகட்சி ஒத்துழைப்புடன்தான் நாடு மெல்ல மெல்ல மறுகாலனியாக்கப்பட்டு வருகிறது. இத்தாராளமயமாக்கலையும், அதைத் தாங்கி வரும் எல்லா வண்ண ஓட்டுக்கட்சிகளையும் எதிர்த்து முடியடிப்பதில்தான் நமது நாட்டு உழைக்கும் மக்களின் நலன் அடங்கியுள்ளது!

www.padippakam.com

# பங்காளிச் சண்டையில் மறைக்கப்படும் பாசிச சதிகள்

"சரித்திரம் படைக்கிறார் ஜெயலலிதா! பா.ஜ.க. கூட்டணி அரசின் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறார். அவரது நிர்பந்தங்களைக் கண்டு பிரதமர் வாஜ்பாய் ஆடிப்போய் நிற்கிறார். அவரது முகத்தில் புன்னகையைப் பார்க்க முடிவதில்லை'' என்று பத்திரிகைகள் கிண்டலும் கேலியும் செய்யுமளவுக்கு பாசிச ஜெயா கும்பலின் கழிசடை அரசியல் கொடி கட்டிப் பறக்கிறது. அவர் வில்லியா, கதாநாயகியா, ராஜதந்திரியா, அகங்காரியா, பேராசைக்காரியா? - இதில் எந்த வகையைச் சேர்ந்தவர் என்று புரிந்து கொள்ள ஆங்கிலப் பத்திரிகைகள் ஆய்வுகள் நடத்துகின்றன. "வாஜ்பாய் பதவியேற்கும் முன்பாகவே ஜெயா தனது அதிர்ச்சி வைத்தியத்தை ஆரம்பித்தார். இன்று மத்திய அரசை ஆட்டுவிக்கும் திரைமறைவு அதிகார மையமாக போயஸ் தோட்டம் மாறிவிட்டது. ஜெயாவுடன் கூட்டணி கட்டியதற்கான தண்டனையை பாரதீய ஜனதா அனுபவிக்கிறது'' என்று பார்ப்பன பத்திரிகைகள் புலம்புகின்றன.

வருமானத்துக்கும் அதிகமாக சொத்து சேர்த்த ஊழல் வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு அம்பலமாகிப் போன சேடப்பட்டி முத்தையாவை மத்திய அமைச்சரவையிலிருந்து பதவி விலகச் செய்தார் ஜெயா. ஆனால் அதே நாளில் முத்தையா பொறுப்பு வகித்த தரைவழிப் போக்குவரத்துத் துறையை மற்றொரு அ.தி.மு.க. அமைச்சரான தம்பிதுரை கவனித்துக் கொள்வார் என்றும், அடுத்து நடைபெறும் அமைச்சரவை மாற்றங்களின் போது அ.தி.மு.க.வின் திண்டுக்கல் சீனிவாசன் இத்துறைக்கான அமைச்சராகப் பொறுப்பேற்பார் என்றும் தன்னிச்சையாக ஜெயா அறிவித்தார்.

பிரதமர்தான் அமைச்சர்களை நியமிப்பார்; அவர்களுக்கான துறைகளைத் தீர்மானிப்பார் என்கிறது அரசியல் சட்டம். ஆனால் இப்படி வெளிப்படையாகவே பிரதமர் அல்லாத ஒருவர் அமைச்சர்களையும் துறைகளையும் தீர்மானிப்பதென்பது இந்திய வரலாற்றில் இதுவே முதன் முறையாகும்.

மத்திய அரசின் வழக்கறிஞர்களை மாற்றியமைக்க பா.ஜ.க. தீர்மானித்ததும், அவ்வழக்கறிஞர்களை ஜெயாவே முடிவு செய்தார். மத்திய சட்ட அமைச்சர் தம்பிதுரையை இதற்கான நியமனக் கடிதங்களைத் தன்னிடம் கொடுக்கச் சொன்னார். தனக்கு விசுவாசமான 33 வழக்கறிஞர்களை தனது மாளிகைக்கு அழைத்து அவர்களுக்கு தன் கையாலேயே நியமன உத்திரவு கடிதங்களைக் கொடுத்தார்.

மத்திய சட்ட துணை அமைச்சரான ஆர்.கே. குமார் ஒரே நாளில் 117 வருமான வரித்துறை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய உத்திரவிட்டுள்ளார். இவர்களில் பலர் ஜெயாவின் ஊழல் வழக்குகளை விசாரித்தவர்கள். இதற்குப் பழிவாங்கும் நோக்கத்துடனும் வழக்குகளை இழுத்தடிக்கவுமே இந்த திடீர் மாற்றம். ஆனால் ஆண்டுதோறும் வழக்கமாக நடக்கும் நிர்வாக மாற்றம்தான் என்று பிரதமரின் ஆலோசகரான பிரமோத் மகாஜன் நியாயம் கற்பிக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மோசமடைந்து விட்டது. வெடிகுண்டு கலாச்சாரம் வேரூன்றிவிட்டது. இஸ்லாமிய தீவிரவாதத்தை தி.மு.க. அரசு வளர்த்துவிட்டது. அரசியல் சட்டப்பிரிவு 356-இன் கீழ் தமிழக ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று ஜெயா கும்பல் ஓயாமல் கூச்சல் போடுகிறது. ஆட்சிக் கலைப்பு விவகாரம் நாடாளுமன்ற மேலவையில் விவாதத்துக்கு வருமளவுக்கு நிலைமை மாறிய போதிலும் கூட பிரதமரால் ஜெயா கும்பலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஜெயா ஆட்டுவித்தபடியே சேடப்பட்டி முத்தையாவின் பதவி விலகலைத் தொடர்ந்து, ஜார்கந்து மூக்தி மோர்ச்சா கட்சியினருக்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் சிக்கியுள்ள பூட்டா சிங், அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டார். ஹெக்டே, ஜெத்மலானி ஆகியோரைப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜெயா கோரியதையடுத்து அவர்களிடம் பிரதமர் விளக்கம் கேட்டார். அவர்களும் தம் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி விளக்கக் கடிதம் கொடுத்துள்ளனர். அதை அரசு தலைமை வழக்கறிஞர் சோலி சோரப்ஜியிடம் கொடுத்து இவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமா என்று வாஜ்பாய் விளக்கம் கேட்டுள்ளார்.

ஜெயாவின் நிர்பந்தங்களால், தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு நிலைமையை ஆராய மத்திய உள்துறைச் செயலாளர் அசோக் குமார் தலைமையில் இருவர் கொண்ட குழுவை வாஜ்பாய் அரசு அனுப்பியது. அக்குழுவினர் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீராக உள்ளது என்று சான்றிதழ் கொடுத்ததும், அருள் வந்து இறங்கியவர் போல ஜெயா மீண்டும் ஆட ஆரம்பித்தார். உடனே அத்வானி, அசோக்குமாரை வேறு துறைக்கு மாற்றம் செய்தும், அவரது சட்டம் - ஒழுங்கு நிலை குறித்த முடிவுக்கு ஆட்சேபம் தெரிவிக்கவும் செய்தார். பின்னர், தமிழக அரசுக்கே தெரியாமல் மற்றொரு குழுவை இரகசியமாக அனுப்பி அறிக்கைகளைப் பெற்று ஜெயாவைச் சாந்தப்படுத்தியுள்ளார். ஜெயா முறுக்கிக் கொள்ளும் போதெல்லாம் மத்திய அரசின் அறிவிக்கப்படாத சமாதானத் தூதராக ஜஸ்வந்த் சிங் சென்னைக்குப் பறந்து வந்து, அவரைச் சமரசப்படுத்துவதே வாடிக்கையாகிவிட்டது.

— இப்படி ஜெயாவின் சதிராட்டங்களையும், அதற்கு பா.ஜ.க. பணிந்து போவதையும் பட்டியலிட்டு, கூட்டணி அரசின் குடுமி நாக்பூர் ஆர்.எஸ்.எஸ். மையத்திடம் இல்லை; போயஸ் தோட்டத்தின் பிடியில் உள்ளது என்று பத்திரிகைகள் கேலி செய்கின்றன.

இந்துவெறி பாசிச பாரதீய ஜனதாவுக்கு ஜெயாவின் நிர்பந்தங்களுக்குப் பணிந்து போவதைத் தவிர வேறு வழி கிடையாது. இப்படி வெளிப்படையாக உருட்டி மிரட்டி "பிளாக்மெயில்'' செய்யாமல் கௌரவமான முறையில் செய்யுங்கள் என்று கெஞ்சி, சமாதானப்படுத்துவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் தெரியவில்லை. ராம் ஜெத்மலானி, ராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் தங்களை பழுத்த அரசியல்வாதிகளாகக் கருதிக் கொண்டு ஜெயா கும்பலை எச்சரிக்கப்





படிப்பகம்

www.padippakam.com

போய், ''வாயை மூடு!'' என்று அ.தி.மு.க. அமைச்சர்கள் சீறியதும் அரண்டு போய் விட்டார்கள். கண்ணியமிக்க அரசியல்வாதிகளாகச் சித்தரிக்கப்படும் இவர்கள் பதவியில் நீடிக்க ஜெயாவின் ஆதரவை விட்டால் வேறு கதியும் கிடையாது. இன்னொருமுறை மத்திய அமைச்சராவது பற்றி கனவில் கூட எண்ணிப் பார்க்க முடியாது. எனவே கண்ணியம், கௌரவம், மானம், ரோஷம் எல்லாவற்றையும் வை.கோ. - இராமதாசு வழியில் மூட்டை கட்டி வைத்துவிட்டு, பதவியைப் பாதுகாத்துக் கொள்ள ஜெயா கும்பலின் எச்சில் வசவுகளையும் பொறுத்துக் கொண்டு நிற்கிறார்கள்.

கிரிமினல்கள், ஊழல் பெருச்சாளிகள், கட்சி மாறிகள், பிழைப்புவாதிகள், கழிசடைகளைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு எப்படியாவது பதவியைப் பிடிப்பது என்ற இலட்சியத்துடன் ஆட்சிக்கு வந்துள்ள பாரதீய ஜனதாவுக்கு ஜெயா கும்பலைப் பற்றி தெரியாததல்ல. எல்லாம் தெரிந்தேதான் அது தேர்தல் கூட்டணி ஏற்படுத்திக் கொண்டது. ஆனால் தொங்கு நிலை நாடாளுமன்றத்தில் தனக்குள்ள பலத்தைக் கொண்டு இப்படி அரசையே ஆட்டுவிக்கும் அளவுக்கு அது எல்லை மீறிப் போகும் என்று எதிர்பார்க்கவில்லை. இருப்பினும் கழிசடை அரசியல் நாயகி ஜெயா கும்பலை விட்டால் பாரதீய ஜனதாவுக்கு வேறு நாதியில்லை. எத்தகைய இழிவையும் தாங்கிக் கொண்டு பதவியில் ஒட்டிக் கொள்வதே இந்துவெறியர்களின் இலட்சியம் என்றாகிவிட்ட பிறகு, ஜெயாவின் உருட்டல் மிரட்டல்கள் அவர்களுக்கு பழகிப் போன விவகாரமாகிவிட்டது. அவற்றைச் சமாளித்து ஜெயாவைத் தாஜா செய்வதே 'திறமையான' பிரதமரின் அன்றாடப் பணியாகிவிட்டது.

''நடந்துவரும் அரசியல் கூத்துக்களை வைத்து இந்த ஆட்சி இன்னும் எத்தனை நாட்கள் நீடிக்கும்?'' என்று எதிர்க்கட்சிகள் பரிகசிக்கின்றன. ஜெயா கும்பலுக்கும் பாரதீய ஜனதா கூட்டணிக்கிடையே முரண்பாடும் மோதலும் முற்றி விரைவில் வெடித்துச் சிதறும் என்று எதிர்பார்க்கின்றன. ஆனால் ஜெயா - பாரதீய ஜனதா பார்ப்பன பாசிசக் கும்பல்களுக்கிடையே கொள்கை, இலட்சியங்களில் முரண்பாடு எதுவும் கிடையாது. இந்துவெறிக் கும்பலும், பாசிச ஜெயா கும்பலும் தத்தமது செயல் திட்டங்களை விரைவாக நிறைவேற்றிக் கொள்வதில் உள்ள தடைகளால் ஏற்படும் மனக்கசப்பும் ஆதங்கமும்தான் இவை!

தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு தானே மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி தமிழகத்தைச் சூறையாட வேண்டும்; தன் மீதான இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மீது தொடரப்பட்டுள்ள கிரிமினல் குற்ற வழக்குகள் அனைத்தும் கிடப்பில் போடப்பட வேண்டும் என்பதே ஜெயாவின் செயல் திட்டம். தனது ஆதரவின்றி பாரதீய ஜனதா கூட்டணி அரசு நீடிக்க முடியாத தொங்கு நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு, தனது நோக்கங்களை உடனடியாக ஈடேற்றிக் கொள்ள பாசிச ஜெயா கும்பல் துடிக்கிறது. அதனுடன் முழுமையாக உடன்படும் பாரதீய ஜனதா, பொருத்தமான தருணத்திற்கு காத்திருக்குமாறு அறிவுறுத்தி சமரப்படுத்தியும், ஜெயா கும்பலை திருப்திப்படுத்தி நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது.



உள்துறை, தகவல் தொடர்பு, கல்வி, மனித வள மேம்பாடு, நிதித் துறைகளைத் தனது கையில் வைத்துக் கொண்டு, இந்துவெறி பாசிச ஆட்சிக்கான அடித்தளத்தை அமைக்க இரகசியமாக முயன்று வருகிறது, பா.ஜ.க.

தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை விட, அங்கு சில ஆண்டுகளாகப் பரவியுள்ள தீவிரவாதமும் வன்முறையும் மத்திய அரசுக்குக் கவலை அளிக்கிறது என்று ஜெயாவின் பாட்டுக்குப் பின்பாட்டு பாடுகிறார் அத்வானி. வேறு வழியில்லை எனில் மாநில அரசைக் கலைக்க 356-ஆவது பிரிவைப் பயன்படுத்த வேண்டும் என்பதே அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்காரின் கருத்து என்று பீடிகை போடுகிறார். கண்ணியமிக்க ஜனநாயகவாதியாக நாடகமாடும் பிரதமர் வாஜ்பாய், 356-ஆவது பிரிவைத் தவறாகப் பயன்படுத்த மாட்டேம் என்கிறார். அதாவது பொருத்தமான சூழ்நிலைகளை உருவாக்கிக் கொண்டு சரியாகப் பயன்படுத்துவோம் என்று சொல்லாமல் சொல்கிறார். ''தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுமா?'' என்று பத்திரிகையாளர்கள் நேரடியாகக் கேட்டால் பதிலளிக்காமல் நழுவிக் கொள்கிறார். பா.ஜ.க.வின் புதிய தலைவரான குஷாபாவ் தாக்கரே, ''தமிழக அரசு கிரிமினல்களையும் தீவிரவாதிகளையும் ஒடுக்கத் தவறிவிட்டது. அதனால்தான் குண்டுவெடிப்புகள் நடந்தன. தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு நிலைமை மோசமாக உள்ளது'' என்கிறார்.

பாரதீய ஜனதா கூட்டணியில் தொடரும் பங்காளிச் சண்டையில் பாரதீய ஜனதா அரசு செயல்படாமல் முடங்கிக் கிடக்கிறது என்பதும் உண்மையல்ல. சமதா கட்சி லல்லுவைப் பழிவாங்கவும், திரிணாமுல் கட்சி 'மார்க்சிஸ்டு'களைப் பழிவாங்கவும், ஹெக்டே கும்பல் தேவே கௌடாவைப் பழிவாங்கவும், ஜெயா கும்பல் தி.மு.க.வைப் பழிவாங்கவும் துடித்துக் கொண்டிருப்பதே முதன்மை செய்தியாக்கப்பட்டு, இந்த லாவணியில் இந்துவெறிக் கும்பல் செயல்படுத்தி வரும் நடவடிக்கைகள் பின்னுக்கு தள்ளப்பட்டு மறைக்கப்படுகின்றன.

• இந்துவெறி தேசியத்தைப் பரப்புவதற்காகவே உள்துறை, தகவல் தொடர்பு, கல்வி, மனிதவள மேம்பாட்டுத் துறை, நிதித்துறை ஆகிய முக்கிய துறைகளை பாரதீய ஜனதா தனது வசமே வைத்துக் கொண்டுள்ளது.

• மனிதவளத்துறை அமைச்சக செயலாளர், பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள திட்டங்களைச் செயல்படுத்துமாறு தமது துறையினருக்கு சுற்றறிக்கை அனுப்பினார். நம்பிக்கை வாக்கெடுப்பின் போது இந்த உண்மை வெளி வந்ததும், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக வாஜ்பாய் உறுதியளித்தார்.

• நாடு முழுவதும் உள்ள நேரு விஸ்வ யுவ கேந்திரா பள்ளிகளில் காவிப்படையினரைப் புகுத்தி இந்துத்துவ பிரச்சாரத்தை முடுக்கிவிட மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

• பாரதீய ஜனதா கட்சிக்கு (ஆட்சிக்கு அல்ல) எதிரான பிரச்சாரங்களை வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் தகுந்த முறையில் முறியடிக்க வேண்டும் என்று தூதரகங்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

• பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை வழி நடத்திச் செல்வதில் ஆர்.எஸ்.எஸ். முக்கிய பங்கு வகிக்கும் என்று அதன் பொதுச் செயலாளரான சேஷாத்ரி வெளிப்படையாகவே அறிவித்துள்ளார். அயோத்தியில் விரைவில் ராமன் கோயில் கட்டப்படும்; நாடாளுமன்றத்தில் இதற்கென சட்டம் இயற்றப்படும்; பா.ஜ.க. அமைச்சர்கள் ஆர்.எஸ்.எஸ்.-இல் பயிற்சி பெற்றவர்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.


படிப்பகம்

www.padippakam.com

• அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் ராமன் கோயில் கட்டுவதற்கான பணிகள் வேகமாக நடந்து வருகின்றன. அயோத்தியிலுள்ள ராம்காட் பகுதியில் நியாஸ் காரியசாலா எனும் கோயில் கட்டும் அலுவலகத்தில் நூற்றுக் கணக்கான சிற்பிகள், ராமன் கோயிலுக்கான சிற்பங்களை செதுக்கி வருகின்றனர் என்று ஆர்.எஸ்.எஸ்.-இன் அதிகாரபூர்வ ஏடான ''ஆர்கனைசர்'' கூறுகிறது.

• தென் மாநிலத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைந்த முறையில் கண்காணித்து ஒடுக்க சிறப்பு தனிப்பிரிவு போலீசுப் படையை உருவாக்க உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது. ஏற்கனவே பஞ்சாபில், காஷ்மீரில் இத்தகைய போலீசுப்படை உள்ளது. விடுதலைப் புலிகள், மக்கள் யுத்தக் குழு, நக்சல்பாரிகள் உள்ளிட்ட இதர போராளி அமைப்புகள், அரசுசாரா தன்னார்வக் குழுக்கள் ஆகியவற்றை இச்சிறப்புப் படை கண்காணித்து ஒடுக்கும்.

• இந்து இளைஞர்களுக்கு தற்காப்புப் பயிற்சி அளிக்க பஜ்ரங் தளமும், விசுவ இந்து பரிசத்தும் நாடு முழுவதும் பயிற்சி மையங்களைத் தொடங்க உள்ளன.

• மக்கள் தொகை கணக்கெடுப்பையொட்டி, குடிமக்களுக்கு அடையாள அட்டை வழங்கும் திட்டத்தைக் கொண்டுவரப் போவதாக அத்வானி அறிவித்துள்ளார். அந்த அட்டையில் வயது, சாதி, வசிக்கும் இடம் உட்பட மற்ற தகவல்கள் இருக்கும் என்கிறார். இதன் மூலம் மதச் சிறுபான்மையினரையும், தாழ்த்தப்பட்டோரையும் அடையாளம் கண்டு இந்துவெறியர்கள் ஒடுக்குவதற்கும் அச்சுறுத்துவதற்கும் சாதகமாகிவிடும். ஆனால் இந்த நோக்கத்தை மூடி மறைத்து, சட்ட விரோதகமாக இந்தியாவுக்குள் ஊடுருவும் அந்நியர்களை இனங்காண இந்த அடையாள அட்டை பயன்படும் என்கிறார் அத்வானி.

• தற்போதைய நாடாளுமன்ற ஆட்சி முறையால் தமது ராம ராச்சிய பாசிச இலட்சியத்தை உடனடியாக ஈடேற்றிக் கொள்வதில் சிக்கல்கள் உள்ளதால், அதிகாரத்தைத் தமது கையில் குவித்துக் கொள்ளும் வகையில் ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவர பாரதீய ஜனதா கட்சி முயற்சிக்கிறது. இதற்காக அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்து தேவையான திருத்தங்கள் செய்ய ஆணையம் அமைக்க பா.ஜ.க. கூட்டணி அரசு தீர்மானித்துள்ளது.

— தேசியத் திட்டத்தைத் தவிர வேறு இரகசியத் திட்டம் எதுவும் கிடையாது என்று கூறிக் கொண்டே இந்துவெறி பாசிஸ்டுகள் தமது செயல் திட்டத்தை நிறைவேற்ற முனைப்புடன் செயல்படுவதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன. அதிகார வர்க்கம், போலீசு - இராணுவம் அனைத்திலும் இந்து வெறியர்கள் ஏற்கனவே ஆதரவும் செல்வாக்கும் பெற்றுள்ள நிலையில் தமது பாசிச சதித் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதில் அவர்களுக்குப் பெரிய தடைகள் ஏதுமில்லை. எனவேதான் விரைவாக ராம ராச்சியத்திற்கான அடித்தளத்தை வலுவாக நிறுவிக் கொள்ளத் துடிக்கிறார்கள்.

தங்களது தேர்தல் வெற்றியானது, ரத யாத்திரைகள், மசூதி இடிப்பு, மதவெறிப் படுகொலைகள் ஆகிய கிரிமினல் குற்றங்களை சரியானதுதான் என்று நாட்டு மக்கள் அங்கீகரித்து விட்டதை நிரூபிப்பதாக இந்துவெறியர்கள் சித்தரிக்கிறார்கள். அதேபோல, தனது இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகள், ஆடம்பர - ஊதாரித்தனங்கள், கொலைகார ஆட்சி ஆகிய கிரிமினல் குற்றங்களை நியாயமானதுதான் என்று தமிழக மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டதாக பாசிச ஜெயா கும்பல் கொட்டமடிக்கிறது. இவற்றின் மூலம் கொலை - கொள்ளை சூறையாடல்களையும் கழிசடைத்தனத்தையும் நாட்டின் - பொது வாழ்வின் பண்பாடாக மாற்றிவிட அவர்கள் துடிக்கிறார்கள்.

இவையெல்லாம் எதிர்க்கட்சிகள் அறியாத இரகசியங்கள் அல்ல. இந்துவெறி கொலைகாரர்களுக்கும் அதன் கூட்டாளியான கொள்ளைக்கார ஜெயா கும்பலுக்கும் நாட்டின் சட்டம் - ஒழுங்கு பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது என அம்பலப்படுத்தி இச்சதிகார கும்பலை முறியடிப்பதற்குப் பதிலாக, தி.மு.க., போலி கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து எதிர்க் கட்சிகளும் வெறும் அறிக்கைப் போர், அடையாள எதிர்ப்புடன் முடங்கிக் கிடக்கின்றன. எதிர்க் கட்சிகளின் கையாலாகாத்தனமும் தீவிரமாகி விட்ட நாடாளுமன்ற அராஜகமும் இச்சதிகார பாசிசப் பங்காளிகளின் கொட்டத்துக்குச் சாதகமாகி விட்டன.

இக்கும்பல் தம்மை பலப்படுத்திக் கொண்டு பாசிசத்தை ஏந்திச் சுழற்றுமுன், மிக விரைவாக, கழிசடை அரசியல் நாயகி ஜெயா கும்பலையும், பதவி எலும்புத் துண்டுக்காக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுக்கும் பா.ம.க. - ம.தி.மு.க. பிழைப்பு வாதிகளையும், இந்து வெறியர்களின் அனைத்து சதிகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும். இச்சதிகார பாசிச கொள்ளைக் கும்பல் வெற்றி பெறுமா, அல்லது அதன் முதுகெலும்பு முறிக்கப்படுமா என்பதை புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் ஒன்றிணைந்த போராட்டங்கள்தான் தீர்மானிக்கும்.

• மனோகர்

# சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் லெனினை நினைவு கூர்வோம்!

சர்வதேசப் பாட்டாளி வர்க்க ஆசானும், உலகின் முதல் சோசலிசக் குடியரசான சோவியத் ரசியாவை உருவாக்கியவருமான தோழர் லெனினின் 129-ஆவது பிறந்த நாள், 22.04.98 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி - இம்மூன்று புரட்சிகர அமைப்புகளால் தமிழகமெங்கும் புரட்சிகர உணர்வு - உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

• சென்னையில் சேத்துப்பட்டு பகுதியை ஒட்டி உள்ள நேரு பூங்கா பின்புறம் உள்ள அண்ணா நகர் குடியிருப்பில் தோழர் லெனின் பிறந்த நாள் சென்னை ம.க.இ.க.வினரால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. லெனின் உருவப்படத்தை அலங்கரித்து, மக்கள் கூடுமிடத்தில் காலை 9 மணிக்கு வைத்தனர். பகுதி முழுதும் சிவப்புத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, லெனின் பிறந்த நாள் எனப் பதாகையும் கட்டப்பட்டது.

காலையிலிருந்தே மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் புரட்சிகரப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. இடையிடையே லெனின் பற்றியும், பிறந்த நாள் கொண்டாடப்படுவதன் அவசியமும் விளக்கப்பட்டது. மாலை 5 மணிக்கு பகுதி நுழைவாயிலில் ம.க.இ.க. செங்கொடியை, ம.க.இ.க மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் ஏற்றி வைத்தார்.

பின்பு லெனின் பிறந்த நாள் விழா தொடங்கியது. தோழர் சரவணன் தலைமை தாங்கினார். கவிதைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் நடந்தன. மூன்று பேர் கொண்ட நடுவர் குழு பரிசுக்குரியவர்களை அறிவித்தனர்.

அதன்பின் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகள், பெண் தோழர்கள், ம.க.இ.க.வினரின் நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. முந்தைய நாட்களிலேயே லெனின் பிறந்த நாளுக்கான சிறுவர், சிறுமியர், இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தியிருந்தனர். அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியில் சர்வதேசிய கீதத்துடன் விழா முடிந்தது. விழா முடிவுற்ற பின் பகுதியில் ஏற்பாடு செய்திருந்த மாட்டுக்கறி விருந்து அனைவருக்கும் பரிமாறப்பட்டது.

தோழர்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். பகுதி மக்களும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

• கோவையில் மக்கள் கலை இலக்கியக் கழகமும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் இணைந்து அறைக் கூட்டம் நடத்தின. தோழர்கள் பலரும் தங்கள் குடும்பத்தினருடன் லெனின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். லெனினைப் பற்றியும், அவரிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை குறித்தும் பல தோழர்கள் உரையாற்றினர்; கூட்ட இறுதியில் ம.க.இ.க. கோவை கலைக் குழுவின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.



படிப்பகம்

www.padippakam.com

# சட்டம் - ஒழுங்கு பற்றிப் பேச ஜெயாவுக்கு அருகதை உண்டா?

பாராளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கும்பலுக்கு எதிர்பாராமல் கிடைத்த வெற்றியையடுத்து, அக்கட்சியின் நிரந்தரத் தலைவி ஜெயா எப்படியாவது மீண்டும் தமிழக முதல்வர் பதவியிலும் நிரந்தரமாக அமர்ந்துவிட ஆலாய்ப் பறக்கத் தொடங்கிவிட்டார். இதற்கு, பாராளுமன்ற சனநாயக முறைப்படி அடுத்த தேர்தல் வரும் வரை காத்திருக்க ஜெயா தயாராக இல்லை. மாறாக, தனது சகபாடியான பா.ஜ.க.வுடன் சேர்ந்து சதி செய்து, தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்து, இடைத் தேர்தலை நடத்தி, கொல்லைப்புற வழியாக ஆட்சியைக் கைப்பற்றிவிட இரகசியத் திட்டம் போட்டு, அதற்கேற்ப காய்களையும் நகர்த்தி வருகிறார்.

''இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? என நினைப்பவர்கள், ஒரு ஐந்தாறு ஆண்டுகள் பின்னோக்கிப் பார்ப்பது நல்லது. 1991-ஆம் ஆண்டு ஜெயா காங்கிரசோடு கூட்டணி சேர்ந்து கொண்டு, தி.மு.க.விற்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருப்பதாகப் பழி போட்டார்; அப்பொழுது காங்கிரசின் பினாமியான சந்திரசேகர் ஆட்சியைத் தூண்டிவிட்டு, தி.மு.க. ஆட்சியைக் கவிழ்த்தார். விடுதலைப் புலிகளால் ராஜீவ் கொல்லப்பட்டதற்கு தி.மு.க.வும் உடந்தை என்ற அவதூறு பிரச்சாரத்தை அவிழ்த்து விட்டும், பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டியும் வஞ்சகமான வழிமுறையில் ஆட்சியைக் கைப்பற்றினார்.

91-ஆம் ஆண்டு, 'அமைதிப் பூங்காவான தமிழகத்தில் ஆயுதக் கலாச்சாரம் பெருகி விட்டதாக' ஊதிப் பெருக்கிய இப்பாசிசக் கும்பல், இப்பொழுது தமிழகத்தில் குண்டு கலாச்சாரம் தி.மு.க. ஆதரவுடன் வேரூன்றி விட்டதாகப் பீதியூட்டுகிறது. தமிழகம் பயங்கரவாத மாநிலமாக மாறிவிட்டதாகவும், கருணாநிதிக்கும் முசுலீம் தீவிரவாதிகளுக்கும் தொடர்பு இருப்பதாகவும், தேசியப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது தமிழக நிலைமை மோசமாக உள்ளதாகவும், தமிழக மக்களைக் காப்பாற்ற மைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தினம் ஓர் அறிக்கை கொடுத்து, தனது கவிழ்ப்பு அரசியலுக்கு அச்சாரம் போட்டு வருகிறார், ஜெயா. தமிழக நிலைமையைப் பார்வையிட வந்த மைய ஆய்வுக் குழு, ''நிலைமை மோசமாக இல்லை'' என்று கூறிய பின்னும் கூட, ஜெயாவின் கோயபல்சு பாணி பிரச்சாரம் ஓய்ந்துவிடவில்லை.

''356-ஐப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க மாட்டேன்'' என நாடாளுமன்ற மேலவையில் பிரதமர் வாஜ்பாய் பேசியதை வைத்து, பா.ஜ.க. ஜெயலலிதாவின் நெருக்கடிகளுக்குப் பணியவில்லை எனச் சொல்லிவிட முடியாது. ஏனெனில், வாக்குறுதிகளுக்கும் இந்து மதவெறி பாசிஸ்டுகளுக்கும் வெகுதூரம் என்பது ஊரறிந்த இரகசியம். தி.மு.க. ஆட்சியைக் கலைக்க தக்க தருணம் பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை. ''தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு மோசமாக இல்லை'' என பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த மைய உள்துறைச் செயலரை அத்வானி தூக்கியடித்ததில் இருந்து, பா.ஜ.க. தலைமை தி.மு.க. ஆட்சி மீது கொண்டிருக்கும் வெறுப்பைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு கெட்டு விட்டதாக நீலிக் கண்ணீர் வடிக்கும் ஜெயா, தான் ஆட்சியில் இருந்தபொழுது, இந்த சட்டங்களையும், மரபுகளையும் எப்படி மதித்து நடந்தார் என நாம் அறியாததா? ஐந்தாண்டு காலம் தமிழகத்தில் ஒரு ரெளடி ராஜ்ஜியத்தை நடத்தியவர்தான் ஜெயா. பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா முகத்தில் திராவகத்தை ஊற்றியும், ரெளடி கும்பலை ஏவிவிட்டு விஜயன், சண்முகசுந்தரம் என்ற இரண்டு வழக்கறிஞர்களைத் தாக்கியும் தமிழகத்தில் கிரிமினல் அரசியல் பண்பாட்டை ஒரு உச்சித்திற்கு வளர்த்துச் சென்றவரே ஜெயாதான்.

ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபடுவதிலும், பொதுச் சொத்தைக் கொள்ளையடிப்பதிலும், வளைத்துப் போடுவதிலும் அ.தி.மு.க. ஆட்சி இந்தியாவையே திகைக்க வைத்தது. சூட்கேஸ் கலாச்சாரம் என்ற வார்த்தை, ஜெயாவின் தயவில்தான் தமிழகத்தினுள் நுழைந்தது. ஜெயா - சசி கும்பல், அ.தி.மு.க. அமைச்சர்கள், சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட கையளவேயான சிறு கும்பல், அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்ட விரோதமாக அடித்த கொள்ளைக்காகத்தான் அவர்கள் மீது 48 கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்பது வழக்குகளில் ஜெயா முதல் குற்றவாளியாவார்.

• ''ஸ்பிக்'' நிறுவனத்தில் தமிழக அரசுக்குச் சொந்தமாக இருந்த 26 சதவீத பங்குகளை, அந்நிறுவனத்தின் பிற பங்குதாரர்களான எம்.ஏ. சிதம்பரம், ஏ.சி. முத்தையாவிற்கு அடிமாட்டு விலைக்கு விற்றது அ.தி.மு.க. அரசு. 1992-ஆம் ஆண்டில் நடந்த இவ்விற்பனையை தாராளமயக் கொள்கையைக் காட்டி நியாயப்படுத்தினார் ஜெயா. அப்பொழுது தமிழக அரசின் தொழிற்துறை செயலராக இருந்த சந்திரலேகா இவ்விற்பனைக்கு ஒத்துழைக்க மறுத்ததால்தான் அவர் மீது பட்டப்பகலில் திராவகம் வீசப்பட்டது. இப்பொழுது ஜெயாவிடம் ஒட்டிக் கொண்டுவிட்ட சுப்பிரமணிய சுவாமி, இவ்விற்பனையால் தமிழக அரசுக்கு 100 கோடி ரூபாய் நட்டமேற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சுமத்தி சென்னை உயர்நீதி மன்றத்தில் பொது நலன் வழக்குத் தொடுத்தார்.

இவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், விற்கப்பட்ட ஸ்பிக் நிறுவனப் பங்குகள் மீண்டும் தமிழக அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், ஜெயலலிதா, ஏ.சி. முத்தையா, எம்.ஏ. சிதம்பரம் இம்மூவரும் இரகசியத் திட்டம் தீட்டி தமிழக அரசுக்கு நட்டமேற்படுத்தியதற்கு ஈடாக 28.29 கோடி ரூபாய் செலுத்த வேண்டும்'' எனத் தீர்ப்பளித்துள்ளது. மேலும், இவ்விற்பனையால் தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள ஒட்டு மொத்த இழப்பு எவ்வளவு என்பதை விசாரிக்க மைய புலனாய்வுத் துறைக்கு உத்தரவிட்டுள்ளது.

இத்தீர்ப்பில், ''ஜெயாவின் செயலும்

**தேர்தல் வெற்றியைக் காட்டி, தன் மீதான ஊழல் - கிரிமினல் குற்றங்களை மக்கள் மன்னித்து விட்டதாகத் திரித்துப் பேசுகிறார், ஜெயா.**





படிப்பகம்

www.padippakam.com

நடத்தையும் சட்டவிரோதமானவை'' என்றும். ''ஜெயா அதிகாரத்தில் தொடர அனுமதிக்கப்பட்டிருந்தால், அது செழித்தோங்கும் ஜனநாயகத்தின் மீது அழிக்க முடியாத கறையை மட்டும் ஏற்படுத்தியிருக்காது; ஒட்டு மொத்த நாட்டின் பொருளாதாரக் கட்டுமானத்தையே தகர்த்திருக்கும்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தீர்ப்புக்கு எதிராக ஜெயா மேல் முறையீடு செய்ததையடுத்து, சென்னை உயர் நீதிமன்ற அமர்வு, தீர்ப்பில் பணம் திரும்பக் கட்டச் சொல்லி உத்திரவிடப்பட்டுள்ள பகுதிக்கு மட்டும் இடைக்கால தடை விதித்துள்ளது; மைய புலனாய்வுத் துறை தனது விசாரணையைத் தொடர அனுமதித்துள்ளது.

• ஜெயாவும், அவரது உடன்பிறவா சகோதரி சசிகலாவும், பங்குதாரர்களாக இருக்கும் ''ஜெயா பப்ளிகேஷன்ஸ்'' என்ற நிறுவனத்தின் பெயரில், சென்னை கிண்டி தொழிற்பேட்டையில் இயங்கி வந்த ''டான்சி பவுண்டரி'' என்ற தமிழக அரசு நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தையும், கட்டிடத்தையும் 1.82 கோடி ரூபாய்க்கு விலைக்கு வாங்கினர். இவ்விற்பனை 1992-ஆம் ஆண்டு நடந்தது. அச்சமயத்தில் ஜெயா - சசி கும்பலால் வளைத்துப் போடப்பட்ட இந்த நிலம், கட்டிடத்தின் உண்மையான மதிப்பு 4.62 கோடி ரூபாயாகும். சட்டத்தை வளைத்து, போலியான ஏலமொன்றை நடத்தி, இந்த பொதுச் சொத்துக்களைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம் தமிழக அரசுக்கு 3.13 கோடி ரூபாய் நட்டமேற்பட்டது.

இதே மோசடித் தனத்தைக் கையாண்டு, ஜெயா - சசி கும்பல் ''சசி எண்டர்பிரைசஸ்'' என்ற நிறுவனத்தின் பெயரில், ''டான்சி எனாமல்டு வயர்ஸ்'' என்ற அரசு நிறுவனத்துக்குச் சொந்தமான நிலம், கட்டிடம், இயந்திரங்களையும் வளைத்துக் கொண்டது. ஜெயா தமிழக முதல்வராக இருந்து கொண்டு நடத்திய மோசடியினால் தமிழக அரசு 66.11 இலட்ச ரூபாய் நட்டமடைந்தது.

இவ்விரண்டு மோசடிகளுக்காகவும் ஜெயாவின் மீது ''கிரிமினல் சதித் திட்டம் தீட்டுதல்,'' ''ஏமாற்றுதல்'', ''நம்பிக்கை மோசடி செய்தல்'' என்ற பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேலும், ''பொது ஊழியர் அரசு சொத்துக்களை வாங்கக் கூடாது'' என்ற சட்ட விதியை தமிழக முதல்வராக இருந்த ஜெயா தெரிந்தே மீறியிருக்கிறார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

இந்த நிலபேர ஊழல் வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று ஜெயா தாக்கல் செய்திருந்த மனுவை, ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப் பட்டிருக்கும் சிறப்பு நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. அத்தீர்ப்பில், ''அரசாங்கத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற நயவஞ்சக எண்ணத்துடன் தான் இவ்விற்பனை நடந்துள்ளது'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஜெயா - சசிகலா, அ.தி.மு.க. அமைச்சர்கள், சில ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட ஒரு சிறு கும்பல், அதிகாரத்தைப் பயன் படுத்தி சட்ட விரோதமாக அடித்த கொள்ளைக்காகத்தான் அவர்கள் மீது 48 கிரிமினல் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்பது வழக்குகளில் ஜெயா முதல் குற்றவாளியாவார்.**

• தமிழக முதல்வராக இருந்த ஜெயா, மின்துறை மந்திரியாக இருந்த கண்ணப்பன், நிதித்துறை மந்திரியாக இருந்த நெடுஞ்செழியன், தலைமைச் செயலராக இருந்த அரிபாஸ்கர் இந்நால்வரும் கூட்டணி அமைத்துக் கொண்டு எரிசக்தி திறன் குறைந்த நிலக்கரியை இறக்குமதி செய்ய அனுமதித்ததன் மூலம் அடித்த கொள்ளை மட்டும் 6.50 கோடி ரூபாயாகும். அச்சமயத்தில் பொதுப் பணித் துறை செயலராக இருந்த சுந்தரம், ''இந்த நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது'' என நிலக்கரி இறக்குமதி கோப்பில் தனது மறுப்பினை எழுதியுள்ளார். ஆனால், நிலக்கரியை இறக்குமதி செய்ய அரசாணை வழங்கிய ஜெயாவோ, அந்த அதிகாரியின் மறுப்பினைக் காதில் வாங்கிக் கொள்ளாததோடு, அவரின் குறிப்புகள் அனைத்தையும் நிலக்கரி இறக்குமதி கோப்பில் இருந்து மாயமாய் மறையச் செய்துவிட்டார்.

• 1995-ஆம் ஆண்டு தமிழக கிராம பஞ்சாயத்துக்களுக்கு வண்ணத் தொலைக் காட்சி பெட்டிகள் வாங்கிக் கொடுத்த ஊழல் வழக்கில், ஜெயா - சசி கும்பல் 10.6 கோடி ரூபாய் ஆதாயமடைந்திருப்பதாக சிறப்பு நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. முழு அடைப்பு நடந்த 30.11.95 அன்று தனது போயஸ் தோட்டத்து பங்களாவில் அதிகாரிகளை அழைத்து, ''ஒரு வண்ண தொலைக் காட்சிப் பெட்டிக்கு ரூ. 14.500 என விலை நிர்ணயம் செய்து, 45.302 வண்ண தொலைக் காட்சி பெட்டிகள் வாங்க முடிவெடுத்துவிட்டதாகக் கூறினார்'' ஜெயா. இந்த விலை மிக அதிகம் என நிதியமைச்சக அதிகாரிகள் எழுப்பிய மறுப்பினை ஜெயா ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

மேலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்குவது குறித்து வெளிப்படையாக ''டெண்டர்'' கோரப்படவில்லை. மாறாக, பி.பி.எல்., சாலிடெர், அப்ட்ரான், கெல்ட்ரான், வீடியோகான் என்ற ஐந்து நிறுவனங்களிடமிருந்து மட்டும்தான் வண்ண தொலைக் காட்சி பெட்டிகள் வாங்கப்பட்டன.

இந்நிறுவனங்கள் உள்ளாட்சித் துறை மந்திரியாக இருந்த செல்வகணபதிக்கு 6.60 கோடி ரூபாயும், உயர் அதிகாரிகளான பாண்டேயிடம் 1.05 கோடி ரூபாயும், ஜனார்த்தனத்திடம் 38.56 இலட்ச ரூபாயும், அரிபாஸ்கரிடம் 35 இலட்ச ரூபாயும், சசிகலாவின் உறவினர்களான பாஸ்கரனிடம் முப்பது இலட்ச ரூபாயும், துரைசாமியிடம் 7.35 இலட்ச ரூபாயும் ஜெயாவின் சார்பாக இலஞ்சமாகக் கொடுத்துள்ளன.

• ஜெயா தமிழக முதல்வராக இருந்த பொழுது, தான் மாதமொன்றுக்கு ஒரு ரூபாய் தான் சம்பளம் பெறுவதாகப் பீற்றிக் கொள்வார். அந்த ஐந்தாண்டு காலத்தில், சட்டபூர்வமான அவரது மொத்த வருமானமே முன்னூறு ரூபாய்க்கு மேல் தாண்டியிருக்காது. ஆனால் அந்த ஐந்தாண்டு காலத்தில் சட்டவிரோதமாக அவர் அடித்த கொள்ளை, இலஞ்ச - ஊழல் - அதிகார முறை கேடுகளால் குவிந்த பணத்தைக் கொண்டு 66.65 கோடி ரூபாய்க்கு சொத்துக்களை தனது பெயரிலும், பினாமிகள் பெயரிலும் வாங்கிக் குவித்துள்ளது கண்டறியப்பட்டு, அவர் மீது வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்துள்ளதாக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இலஞ்ச - ஊழல் ஒழிப்புத்துறை போலீசு ஜெயாவின் போயஸ் தோட்டத்து பங்களாவைச் சோதனையிட்டபொழுது, 26.76 கிலோ எடை கொண்ட தங்க - வைர நகைகள், 800 கிலோ எடை கொண்ட வெள்ளிப் பாத்திரங்கள்; 10,500 புடவைகள்; 350 ஜோடி காலணிகள்; வைரக் கற்கள் பதித்த தங்க கைக் கெடிகாரங்கள்; 44 குளிர் சாதனப் பெட்டிகள், 400 முதல் 500 கோடி ரூபாய் பெறுமான நிலப் பத்திரங்கள், 100 வீட்டுப் பத்திரங்களைக் கைப்பற்றி நீதிமன்றத்திடம் ஒப்படைத்துள்ளது.

ஐந்து வருடத்தில் ஜெயா அடித்த கொள்ளையில் சிறு துளி.



• கொடைக்கானலில் சட்ட விதிகளுக்குப் புறம்பாக ''பிளஸன்ட் ஸ்டே ஹோட்டல்'' என்ற விடுதியினைக் கட்ட அனுமதி வழங்கியது;

• ஏலத் தொலையினைப் பெறாமலேயே கருங்கள் (கிரானைட்) வெட்டியெடுக்க சட்ட விரோதமாக அனுமதி வழங்கி



படிப்பகம்

www.padippakam.com

யதில் நடந்த 39 கோடி ரூபாய் ஊழல்;

• தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் பொழுது விளம்பரம் செய்வதற்கு உரிமம் பெற்றிருந்த ''மீனா அட்வர்டைசர்ஸ்'' என்ற நிறுவனம் தமிழக அரசுக்குச் செலுத்த வேண்டிய பாக்கித் தொகை இரண்டு கோடி ரூபாயை ரத்து செய்து சலுகை காட்டியது;

• அமெரிக்காவிலிருந்து பெற்ற மூன்று இலட்சம் அமெரிக்க டாலர்களை, அந்நியச் செலாவணி விதிகளுக்குப் புறம்பாக, ஜெயா தனது வங்கிக் கணக்கில் வரவு வைத்துக் கொண்டது; — இவ்வழக்குகள் அனைத்திலும் ஜெயா முதல் குற்றவாளியாவார்.



ஜெயா கும்பல் ஏவிவிட்ட ரவுடிகளால் தாக்கப்பட்ட வக்கீல் சண்முகசுந்தரம்

கருணாநிதி ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டதாக நீலிக் கண்ணீர் வடிக்கும் ஜெயா, தனது ஆட்சியின் பொழுது, தானே தமிழகத்தின் சட்ட - ஒழுங்கிற்கு மிகப் பெரும் சவாலாகவும், அபாயமாகவும் இருந்தார் என்பதே உண்மை. ஜெயாவின் மீது தொடுக்கப்பட்டுள்ள இக்கிரிமினல் வழக்குகளே இதற்கு ஆதாரமாகும்.

இப்பொருளாதாரக் கிரிமினல் குற்றங்களை தவிர, அந்த ஐந்தாண்டு காலமும் ஜெயா நடத்திய ரவுடித்தனத்திற்கு அளவே கிடையாது. உதாரணத்திற்குச் சொன்னால், அடித்த கொள்ளையில் தனது பங்கைத் தரவில்லை என்பதற்காக, பாண்டே என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டிற்கு ரவுடிக் கும்பலை அனுப்பி, அவரைத் தாக்கி, அவர் வீட்டில் இருந்த பணம் - பத்திரங்களை அள்ளி வரச் செய்தார்; ஜெயாவின் ரவுடிக் கும்பலால் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. ரமேஷ் சென்னையில் நடுரோட்டில் வழி மறித்துத் தாக்கப்பட்டார். ஜெயாவை எதிர்த்து சுவாமி நடத்திய பொதுக் கூட்டங்களில் எல்லாம், ஜெயா ஏவிவிட்ட பெண் ரவுடிகள் அபாச சைகைகளைக் காட்டி கலாட்டா செய்தனர். இதுதான் ஜெயா ஜனநாயகத்திற்கு தந்துள்ள மதிப்பு!

பாராளுமன்ற தேர்தலில் தனக்குக் கிடைத்த வெற்றியைக் காட்டி தமிழக மக்கள் தன்னை நிரபராதி — அப்பாவியெனத் தீர்ப்பளித்து விட்டார்கள் எனத் திரித்துப் பேசும் ஜெயா, இப்பொழுதும்கூட தன்மீது போடப்பட்டுள்ள வழக்குகளை சட்டரீதியாகச் சந்திக்கத் தயாராக இல்லை. சட்டத்திலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, வழக்கு விசாரணையை இழுத்தடிக்கும் குறுக்கு வழியில் மும்முரமாக இறங்கியுள்ளார்.

முதலில், தன்னை விசாரிக்க தமிழக கவர்னர் அனுமதி கொடுத்தது செல்லாது என மூன்று மனுக்களை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். அம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டபின் டான்சி நிலபேர ஊழல் வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் என மீண்டும் மனுதாக்கல் செய்தார். இம்மனுவை தள்ளுபடி செய்த உயர்நீதி மன்ற தீர்ப்பை எதிர்த்து மீண்டும் நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறியுள்ளார்.

இவை ஒருபுறமிருக்க, ஜெயா ஆட்சியின் பொழுது நடந்த ஊழல் - முறைகேடுகளை விசாரிக்க தமிழக அரசு மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் அமைத்திருப்பதை எதிர்த்து, ஜெயாவும் ஊழல் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ள அவரது சகாக்களும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். இது பற்றி உயர்நீதி மன்றத் தீர்ப்பு வரும்வரை, சிறப்பு நீதிமன்றங்கள் இவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதற்கு அப்பால் வழக்கு விசாரணையை எடுத்துச் செல்ல முடியாது.

இதோடு, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் வங்கி, வருவாய், சட்டம், நிர்வாகத்துறை அமைச்சர் பதவிகளை அ.தி.மு.க. எம்.பி.க்களுக்கு வாங்கிக் கொடுத்து, சி.பி.ஐ.யும், அமலாக்கப் பிரிவும் விசாரித்து வரும் தன் மீதான ஊழல் வழக்குகளை நீர்த்துப் போகச் செய்யவும், தமிழக உயர்நீதிமன்ற நீதிபதியை இடம் மாற்றம் செய்யவும் முயல்கிறார் ஜெயா. எம்.ஜி.ஆரின் வைப்பாட்டியாக இருந்த ஒரே 'தகுதி'யைக் கொண்டு அரசியலில் குதித்த கழிசடை அரசியல் நாயகி ஜெயாவிடமிருந்து இக்கிரிமினல் - குறுக்குப் புத்தியைத் தவிர வேறு எதை நாம் எதிர்பார்க்க முடியும்?

ஜெயாவும், அ.தி.மு.க. கும்பலும் ஒரு கொள்ளைக் கூட்டமென்றால், அதோடு கூட்டணி சேர்ந்திருக்கும் பா.ஜ.க.வோ ஒரு கொலைகாரக் கும்பல். மதவெறிப் படுகொலைகளை நடத்துவதுதான் அக்கட்சியின் அரசியல் நடைமுறை. இரத யாத்திரை, செங்கல் யாத்திரை, பாபர் மசூதி இடிப்பு, பம்பாய்க் கலவரம், கோவைக் கலவரம் என அடுத்தடுத்து முசுலீம் எதிர்ப்பு மதக் கலவரங்களைத் தூண்டிவிட்டு, அப்பாவி இந்துக்களையும் முசுலீம்களையும் பலியிட்டுத்தான் ஆட்சிக் கட்டிலில் ஏறி அமர்ந்திருக்கிறது, பா.ஜ.க.

இவ்விரு பார்ப்பன - பாசிஸ்டுகளும் கோவை குண்டு வெடிப்புகளையும், தமிழகத்தில் வளர்ந்து வரும் முசுலீம் மதத் தீவிரவாதத்தையும் காட்டி, தங்கள் கொள்ளை - கொலை - கிரிமினல் நடவடிக்கைகளை மூடி மறைத்துவிட முயலுகின்றனர். தீவிரவாதம், குண்டு கலாச்சாரம், சட்டம் ஒழுங்கிற்கு ஆபத்து எனப் பூச்சாண்டி காட்டி, இவற்றைத் தடுக்கும் தலைவர்களாகவும் தியாகிகளாகவும் தங்களைக் காட்டி, ஓட்டுப் பொறுக்கி, தமிழக ஆட்சியைப் பிடித்துவிடத் துடிக்கிறார்கள். இக்கும்பல் தமிழகத்தில் அபாயமாகக் குறிப்பிடும் முசுலீம் தீவிரவாதத்தை விட, இவ்விரு பாசிஸ்டுகளின் கூட்டணிதான் தமிழகத்தை சீர்குலைக்கக் காத்திருக்கும் மிகப் பெரும் அபாயம்!

அதே சமயம் எதிர்த்தரப்பான தி.மு.க. கூட்டணி, ஒரு கொள்ளைக்காரியும் - கொலைகார கும்பலும் தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு பற்றிப் பேசுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்ற நியாயமான கேள்வியை எழுப்பக்கூட திராணியற்றுப் போய்க் கிடக்கிறது. திராவிடம், நாத்திகம், பகுத்தறிவு என்ற தி.மு.க.வின் கொள்கைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு இந்து மதவெறி பாசிஸ்டுகளை சாந்தப்படுத்த முயல்கிறார் கருணாநிதி. அவரின் இந்த சரணாகதி, பா.ஜ.க. கும்பல் தமிழகத்தில் அரசியலமைப்பு ரீதியாக வலுவாகக் காலூன்றிக் கொள்வதற்குத்தான் உதவும். எனவே, ஜெயாவிடமிருந்தும் அவரது இடுப்பில் குந்திக் கொண்டு வரும் இந்த மதவெறி பாசிஸ்டுகளிடமிருந்தும் தமிழகத்தைக் காப்பாற்ற, தமிழக மக்கள் சட்டபூர்வ எதிர்தரப்பினரான தி.மு.க. கூட்டணியை நம்பிப் பலனில்லை.

தன் மீதும், சசிகலா மீதும் போடப்பட்டுள்ள வழக்குகளை முடக்குவது; தி.மு.க. ஆட்சியைக் கலைத்துவிட்டு தமிழக அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவது - இவைதான் ஜெயாவின் நோக்கம். இதை அடைந்திட எத்தகைய தில்லுமுல்லுகளையும் செய்ய ஜெயா தயக்கம் காட்ட மாட்டார்.

• ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

## தமிழக கைத்தறி நெசவுத் தொழில் வீழ்ச்சி

# தாராளமயமாக்கலின் எதிர் விளைவு!

• தமிழகமெங்கும் கைத்தறி நெசவாளர்கள் வறுமையின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர். கோவை, ஈரோடு, திண்டுக்கல் மாவட்ட நெசவாளர்கள் தங்களின் ஒரே சொத்தான கைத்தறிக்ளையும் வட்டிக் கடையில் அடகு வைத்து மீட்க இயலாமல், வறுமையில் வாடுகின்றனர். இப்பகுதியில் சுமார் 6 லட்சம் நெசவாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

• "கடலூர் மாவட்டம் சி.என். பாளையம் பகுதியில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகள் உற்பத்தியாகாமல் தேங்கியுள்ளன. இதனால் உற்பத்தி செய்ய முடியாமல் வேலையிழந்த நெசவாளர்கள் தம்மிடமுள்ள பொருட்களை அடகு வைத்தும் விற்றும் நாட்களை நகர்த்துகிறார்கள். இதே நிலை தொடர்ந்தால் சாப்பாட்டிற்கே வழியின்றி பட்டினி கிடக்க வேண்டியதுதான்" என்கிறார் சி.என். பாளையம் கே. திருஞானம்.

• "கடலூர், பாண்டிச்சேரி, குறிஞ்சிப்பாடி பகுதிகளில் 2 லட்சம் நெசவாளர்கள் வேலையிழந்து விட்டனர். தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டுவிட்டன. குறிஞ்சிப் பாடியில் அரசே நடத்திவந்த ஐந்து சொசைட்டிகள் உற்பத்தியை நிறுத்திவிட்டன. இதனால் நெசவாளர்களின் வாழ்வு மிக மோசமாகி வருகிறது" என்கிறார் கைத்தறி உற்பத்தி - ஏற்றுமதி வளர்ச்சிக் கழகத் தலைவர் எம்.பி. ராதாகிருஷ்ணன்.

இப்படி இலட்சக்கணக்கான நெசவாளர்கள் வேலையிழந்து வறுமையில் வாடி வருகின்றனர். பட்டினிச் சாவை நோக்கி சிறிது சிறிதாகத் தள்ளப்பட்டு வருகின்றனர். இவர்கள் உற்பத்தி செய்த கைத்தறித் துணிகள் தேங்கியுள்ளன. அரசின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமோ இரண்டு ஆண்டுகளாக கைத்தறிகளை கொள்முதல் செய்வதை நிறுத்தியுள்ளது.

கோவை, ஈரோடு, திண்டுக்கல் மாவட்டங்களில் மட்டுமே ரூ. 600 கோடி மதிப்புள்ள கைத்தறிகள் தேங்கியுள்ளன. பட்டு கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள பட்டுச் சேலைகளின் மதிப்பு 94 கோடி ரூபாய். தனியார் உற்பத்தியாளர்களிடமும் கோடிக்கணக்கில் பட்டுச் சேலைகள், வேட்டிகள் தேங்கியுள்ளன.

இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்து அதிக அளவு மக்கள் உழைப்பில் ஈடுபடுவது கைத்தறி நெசவுத் தொழிலில்தான். ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கை, உலகமயமாக்கல் கொள்கைகளின் விளைவாக கைத்தறி நெசவுத் தொழில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் ஊழல், அதிகார முறைகேடுகளால் கைத்தறி நெசவுத் தொழில் நலிவடைந்தது. இந்த ஆட்சியிலோ கைத்தறி நெசவு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தி.மு.க. அரசாங்கம் பதவி ஏற்றவுடனேயே கைத்தறித் துணிகளுக்கு அரசு ஏற்கனவே வழங்கி வந்த 20 சதவீத மானியத்தை 10 சதவீதமாகக் குறைத்தது. இதனால் கைத்தறித் துணி விலை உயர்ந்து, விற்பனை மளமளவென்று சரிந்து மலை போல் துணிகள் தேங்கி விட்டன. நெசவாளர்கள் ஆறு மாதமாகப் போராடி, 20 சதவீத மானியத்தை திரும்பப் பெற்றாலும் தேங்கிய துணியால் ஏற்பட்ட நெருக்கடி தீராமல் முற்றி இன்று மிக மோசமான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

முன்பெல்லாம் இலவச வேட்டி, சேலை வழங்க அரசு, கைத்தறித் துணிகளையே கொள்முதல் செய்யும். இம்முறையோ விசைத்தறித் துணிகளை வாங்கி வினியோகித்தது அரசு. எனவே தேங்கிய கைத்தறித் துணிகளின் விற்பனைக்கே வழியின்றிப் போனது.

கைத்தறித் துணிகள் தேக்கத்திற்கான முக்கியமான காரணங்களில் ஒன்று கைத்தறிக்கென ஒதுக்கிய ரகங்களை விசைத்தறியிலும் மில்களிலும் தயாரித்து குறைந்த விலையில் சந்தையில் குவிப்பதுதான்.

கைத்தறியில் உற்பத்தியாகும் துணி தரமானதாயிருப்பினும் அதன் விலை சிறிது அதிகம். விசைத்தறித் துணிகள் விலை 30 சதவீதம் வரை குறைவாயிருப்பதால் சந்தையில் விசைத்தறித் துணிகள் அதிகம் விற்பனையாகி கைத்தறித் துணிகள் தேங்குகின்றன.

கோடிக்கணக்கானோர் இந்தியா முழுவதும் கைத்தறி நெசவில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களது தொழில் நசிந்து வாழ்வே பறிபோன நிலையில் 1984-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றம் ஒரு தீர்ப்பு வழங்கியது. 'கைத்தறிக்கென்று உற்பத்தி செய்ய ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட 22 ரகங்களை மற்ற விசைத்தறியாளர்களோ மில்களோ உற்பத்தி செய்யக் கூடாது' எனக் கூறி கைத்தறி நெசவாளர்கள் வாழ்விற்கு உத்திரவாதமளித்தது உச்சநீதி மன்றம்.


இத்தீர்ப்புக்குப் பின்பும் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. கைத்தறித் துணி உற்பத்திக்கான நூல் 'சிட்டா நூல்' எனப்படுவது. இவை நூற்பாலைகளில்தான் உற்பத்தி செய்யப்பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்தன. இராஜீவின் புதிய ஜவுளிக் கொள்கை விளைவாக செயற்கை நூலிழைகளும், செயற்கைத் துணிகளும் சந்தையில் பெருமளவு [illegible]கப்பட்டன. இவற்றை இறக்குமதி செய்ய இங்கிருந்து பெருமளவு பஞ்சு ஏற்றுமதி செய்யப்பட்டது. நூற்பாலைகளுக்கு போதிய அளவு பஞ்சு வராததால் நூற்பாலைகள் கைத்தறிக்கான சிட்டா நூல் உற்பத்தியைப் பெருமளவு குறைத்து விசைத்தறி, மில்களுக்கான கூம்பு நூல்களை மட்டுமே தயாரித்தன.

இதனால் 1991-ம் ஆண்டு கைத்தறி நெசவு திரும்பவும் பாதிக்கப்பட்டு நாடு முழுவதும் கைத்தறித் தொழிலாளர்கள் பலர் பட்டினியால் செத்து மடிந்தனர். அதன் பின்னரே மத்திய - மாநில அரசுகள் இப்பிரச்சினையில் தலையிட்டன. ஆயினும் கைத்தறி நெசவாளர் பிரச்சினைகளை முழுமையாகத் தீர்க்கவில்லை.

திரும்பவும் 1993-ல் சிட்டா நூல் விலை பெருமளவு உயர்ந்தது. சிட்டா நூல் உற்பத்தி குறைந்ததும், சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டதும்தான் இதற்குப் பெருமளவு காரணம். உச்சநீதி மன்றம் கைத்தறிக்கென 22 ரகங்களை ஒதுக்கியிருப்பினும், விசைத்தறியிலும் மில்களிலும் இதே ரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்த அத்துமீறல்கள் மீது அரசு நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை.

அதே நேரம் கைத்தறித் தொழிலாளர்களின் அவலம்பற்றி நாடாளுமன்றம் விவாதித்தது. முடிவாக கைத்தறிக்கென 11 ரகங்களை ஒதுக்கி, அவற்றை உற்பத்தி செய்வதற்கான சிட்டா நூலை உற்பத்தி செய்ய நூற்பாலைகளுக்கு உத்தர

அழிந்து போகும் அபாயத்தில் பாரம்பரிய கைத்தறி நெசவு





படிப்பகம்

www.padippakam.com

விட்டு, முறைப்படுத்தியது. ஆயினும் நூற்பாலைகள் கைத்தறிக்கான சிட்டா ரகநூலை, குறிப்பிட்ட அளவு உற்பத்தி செய்யாமல் எப்போதும் பற்றாக் குறையை ஏற்படுத்தி நெருக்கடிகளை உருவாக்கி வருகின்றன. இன்று வரையும் விசைத்தறியாளர்களும் மில்களும் கைத்தறிக்கென ஒதுக்கிய ரகங்களை உற்பத்தி செய்து சந்தையில் குவிப்பதால், கைத்தறித் துணிகள் தேங்கி இன்று மீண்டும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளன. அரசோ இன்றும் கூட அத்துமீறுகின்றவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது மட்டுமின்றி அரசு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் விசைத்தறி, மில் துணிகளை கைத்தறி என வாங்கி ஏற்றுமதியும் செய்துள்ளது.

இது தவிர தற்போதைய கைத்தறி நெசவு நெருக்கடிக்கு தென்கிழக்காசிய நாடுகளின் பொருளாதார வீழ்ச்சியும் இன்னுமொரு முக்கிய காரணமாகும். இங்கிருந்து பட்டுத் துணிகளும் லுங்கிகளும் பெருமளவு இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இவையனைத்தும் கைத்தறித் துணிகளாகும். இந்நாடுகளின் பொருளாதாரம் வீழ்ந்து, உலகச் சந்தையில் இந்நாடுகளின் பணமதிப்பு வீழ்ச்சியடைந்தது. இதனால் கைத்தறி ஏற்றுமதி கடுமையாக பாதிக்கப்பட்டு துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அரசாங்கமோ இதில் தலையிட்டு பிரச்சினைகளைத் தீர்த்து உதவத் தயாராயில்லை.

இவை தவிர கைத்தறி நெசவுக்கென வழங்கி வந்த வட்டிச் சலுகை, மானியம் முதலியவற்றை அரசாங்கம் குறைத்து விட்டதும் பல காரணங்களில் ஒன்று.

தமிழகத்தில் மட்டும் சுமார் 60 இலட்சம் நெசவாளர்கள் கைத்தறி நெசவை நம்பி வாழ்கின்றனர். இவர்கள் தமது குடும்பத்துடன் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். நாள் முழுதும் குடும்பம் முழுதுமே சேர்ந்து உழைத்தால் தான் தரமான கைத்தறித் துணி உற்பத்தி செய்ய முடியும். இவர்களுக்கு வேறு எந்த வேலையும் தெரியாது. தறியோடு தறியாக இயங்கிய இவர்கள், அரசாங்கத்தின் புறக்கணிப்பால் பட்டினிச் சாவை நோக்கித் தள்ளப் பட்டுள்ளனர்.

தமிழகம் முழுதுமுள்ள இவர்கள் தமது பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் என பல வடிவங்களில் இயக்கம் எடுத்து வருகின்றனர். பட்டினியால் பரிதவிக்கும் தொழிலாளர்கள் பிரச்சினையைத் தீர்க்க வக்கற்ற அரசோ, திருப்பூரில் ஆர்ப்பாட்டம் செய்த நெசவாளர்களைச் சிறையிலடைத்தது.

தமிழக அரசு இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு முத்தரப்புக் கமிட்டியை ஏற்படுத்தியது. அதில் அதிகாரிகள், எம்.எல்.ஏ.க்கள், நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள் இருப்பார்கள் என அறிவித்தனர். ஆனால் அமைக்கப்பட்ட கமிட்டியில் கைத்தறி நெசவாளர் சங்கப் பிரதிநிதிகள் யாருமே இல்லை என்பது முதல் அதிர்ச்சி.

முத்தரப்புக் கமிட்டியிலுள்ள பள்ளிப்பட்டு த.மா.கா. எம்.எல்.ஏ. ஈ.வி.எஸ். ராமன் சமீபத்தில் சட்டமன்றத்தில் பேசும் போது, 'கைத்தறி நெசவாளர்களை விசைத்தறிக்கு மாற்றி விடலாமே' எனப் பேசியுள்ளார். இது இரண்டாவது பேரதிர்ச்சி.

'வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதைத் தடுக்க வேலை வாய்ப்பகங்களை மூடிவிடலாம்' என்பதைப் போல, கைத்தறி நெசவாளர் பிரச்சினையைத் தீர்க்க வக்கற்ற இவர்கள் கைத்தறிகளை மூடிவிடலாம் எனப் பேசுவது அயோக்கியத்தனமன்றி வேறென்ன?

திரும்பத் திரும்ப ஒரு விசச்சுழல் போல கைத்தறி நெசவாளர்கள் பிரச்சினை தோன்றிக் கொண்டே இருப்பதற்கு என்ன காரணம்? 1950-ம் ஆண்டுகளில் கைத்தறித் தொழில் முற்றாக நசிந்து கஞ்சித் தொட்டிகள் உருவான காலம் தொடங்கி இன்றுள்ள வாழ்வா? சாவா? நெருக்கடி வரையிலான பிரச்சினைகளுக்கு அரசின் கொள்கைகளே காரணமாக உள்ளன.

இன்றைக்கு அரசின் தாராளமயப் புதிய பொருளாதாரக் கொள்கைகளால் செயற்கை துணிகள் இறக்குமதி அதிகரித்துள்ளது. இதற்கான அந்நிய செலாவணிக்காக பஞ்சு பெருமளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அரசின் இந்தக் கொள்கைகளை மாற்றாத வரை கைத்தறி நசிவதைத் தடுக்க இயலாது.

கைத்தறிக்கு ஒதுக்கிய ரகங்களை விசைத்தறி, மில்களில் உற்பத்தி செய்வதை அதிகாரிகள் லஞ்சம் பெற்று அனுமதிக்கின்றனர். இவற்றைக் கண்காணித்து, கட்டுப்படுத்தும் அதிகாரம் கைத்தறி கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கினால் இதனால் ஏற்படும் நெருக்கடி தீரும்.

கைத்தறிகளுக்கு என அரசு வழங்கும் மானியங்களை முறையாக வழங்குவதில்லை. மேலும் கைத்தறிகளுக்கு அரசு வங்கிகளில் குறைந்த வட்டிக்கு கடன் கிடைப்பதுமில்லை. இதனால் தனியாரிடம் கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கி நொடிந்து போகின்றனர். அரசு மானியங்களை உடனுக்குடன் வழங்கி, வங்கிக் கடன் பெற உதவ வேண்டும்.

கைத்தறித் துணிகள் ஏற்றுமதியில் நல்ல இலாபமிருக்கிறது. ஆனால் பொருளாதார நெருக்கடி உள்ள காலங்களில், (இப்போதுள்ள தென்கிழக்காசிய நெருக்கடி போல) அரசே தலையிட்டு ஏற்றுமதிக்கு உதவ வேண்டும்.

அரசு நிறுவனங்கள் கைத்தறித் துணிகளை வாங்கி உதவ வேண்டும். இப்படி உற்பத்தித் தேங்காமலிருக்க எத்தனையோ ஆக்கப்பூர்வமான திட்டங்களை அரசு நடைமுறைப்படுத்த முடியும்.

அதற்கு முதற்படியாக அரசு ஏகாதிபத்தியங்களுக்குச் சேவை செய்யும் தனது தாராளமய, தனியார்மய, உலகமயக் கொள்கைகளைக் கைவிட வேண்டும். இக் கொள்கை நீடிக்கும் வரை கைத்தறிக்கான பிரச்சினைகள் தீராது.

எனவே கைத்தறி நெசவாளர்கள் தமது கோரிக்கைகளுக்குப் போராடும் அதே நேரம் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளை முறியடிப்பதற்கான அரசியல் போராட்டப் பாதையில் அணி திரள வேண்டும். அது ஒன்றே நெருக்கடி என்ற விசச் சுழலிலிருந்து தொழிலாளர்கள் நிரந்தரமாக விடுபட உதவும்.

• பாரி

## நாய் வேடம் போட்டதும் குலைக்கும் தலித் எழில்மலை

தலைநகர் டெல்லியில் 11,000-க்கும் மேற்பட்ட அரசு மருத்துவமனை செவிலியர்கள் கடந்த மே 5-ந் தேதி தொடங்கி நடத்திவரும் போராட்டத்தைக் கண்டு இந்துவெறி ஆட்சியாளர்கள் பீதியடைந்துள்ளனர். தொடர்ந்து போராடினால் கைது செய்வோம் என்று அச்சுறுத்தியும், அத்தியாவசியப் பணித்துறைச் சட்டத்தை ஏவியும், முன்னணியாளர்களை வேலை நீக்கம் செய்தும் போராட்டத்தை அடக்கிவிடத் துடிக்கிறார்கள். ஆனால் அவர்களது கேடுகெட்ட முயற்சிக்கு எதிரான விளைவே தோன்றியுள்ளது. செவிலியர் போராட்டம் ஒற்றுமையாக உறுதியுடன் நிற்பதோடு பிற பெரு நகரங்களில் பணியாற்றும் செவிலியர்களின் ஆதரவும் பெருகி வருகிறது. பேச்சு வார்த்தை, இடைக்கால நிவாரணம் போன்ற இழுத்தடிப்புகளுக்கு இம்முறையும் அவர்கள் ஏமாறத் தயாராக இல்லை.

ஆறு மாதங்களுக்குமுன்பு பொதுச் சுகாதாரத்துறை இயக்குநருடன் பேச்சு வார்த்தை நடந்து, சம்பளப்படி உயர்வு, பதவி உயர்வு, குடியிருப்பு வசதி உள்ளிட்டு ஒப்பந்தம் போடப்பட்ட போதிலும், இன்றுவரை எதுவுமே நிறைவேற்றப்படவில்லை. எனவே தான் செவிலியர்கள் நியாயமான போராட்டத்தில் இறங்கினர். டெல்லி மாநில அரசுக்கு எதிராக இதுவரை கண்டிராத, மிகப் பெரிய, விடாப்பிடியாக, உறுதியுடன் நடக்கும் போராட்டமாக செவிலியர் போராட்டம் முன்னேறுகிறது.

பாட்டாளிகளின், ஒடுக்கப்பட்ட மக்களின், பெண்களின் உரிமை பற்றி வாய் கிழியப் பேசிவிட்டு, இப்போது மத்திய சுகாதார அமைச்சரான பிறகு நாயாக மாறி குரைக்கிறார் பா.ம.க.வின் தலித் எழில்மலை. நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள்; போராடினால் கைது செய்வோம் என்று எச்சரிக்கிறார். போராடும் செவிலியர்களைப் பணி நீக்கம் செய்ய ஒப்புதல் அளிக்கிறார். நான் என்ன செய்ய முடியும்? நிதியமைச்சகம்தான் கோரிக்கைகளை நிறைவேற்ற நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நழுவிக் கொள்கிறார். செவிலியர் சங்கத் தலைவர்களுடான பேச்சு வார்த்தைகளின் போதுகூட, எழில்மலை ஓரங்கட்டப்பட்டு பாரதீய ஜனதாவின் நாடாளுமன்ற விவகார அமைச்சரான மதன்லால் குரானாதான் பேரங்களை நடத்துகிறார். தனது துறை சார்ந்த பிரச்சினையில் கூட எழில்மலையால் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க முடியவில்லை.

என்ன செய்வது? பதவி எலும்புத் துண்டுக்காக நாயாக மாறிவிட்ட பிறகு மானம், ரோசத்தை எதிர்பார்க்க முடியுமா? இந்து வெறி எஜமானர்களுக்கு விசுவாசமாகக் குரைக்கத்தானே முடியும்?


படிப்பகம்

# பம்பாய் முசுலீம் எதிர்ப்புக் கலவரம்: தொடரும் பார்ப்பனக் கும்பலின் சதிகள்

குல்னார் - மும்பையில் வாழும் பதின்மூன்று வயதான இளஞ்சிறுமி. ஒவ்வொரு நாளும் காலை தொடங்கி மாலை வரை தனது வயதையொத்த பிற சிறுமிகளைப்போல இயல்பாக பள்ளிக்குச் சென்று திரும்பும் குல்னார், மாலைமங்கத் தொடங்கியதும் முற்றிலும் மாறிவிடுவாள். அவள் உடலெங்கும் லேசான பதட்டம் பரவத் தொடங்கும்; ஏதோவொரு இனம் தெரியாத பயம் அவளை ஆக்கிரமித்துக் கொள்ளும்.

மாலை முழுதும் மங்கித் தெரு விளக்குகள் எரியத் தொடங்கியதும், குல்னார் ஓடிச்சென்று வீட்டு வாசற் கதவை இழுத்தறைந்து சாத்திப் பூட்டிவிடுவாள்; அவள் வீட்டின் சன்னல்களும் திறந்திருக்காது. அதன்பின் மறுநாள் காலையில்தான் வீட்டின் கதவையும் சன்னலையும் திறந்து வைக்க சம்மதிப்பாள்; இரவு அவளிடம் இருந்த பதட்டத்தின் பயத்தின் சுவடே தெரியாமல் இயல்பாக நடந்து கொள்வாள்.

இந்த முசுலீம் சிறுமிக்கு ஏன் இந்த நிலைமை? குல்னார் எட்டு வயதுச் சிறுமியாக இருந்த பொழுதுதான் பம்பாய்க் கலவரம் நடந்தது. தன் கண்முன்னே அக்கம் பக்கத்து வீடுகளில் வாழ்ந்து வந்த முசுலீம்கள் அங்கம் அங்கமாக வெட்டப்பட்டு, தெருவில் அனாதைப் பிணங்களாக செத்துக் கிடந்ததைப் பார்த்தாள்; எரியும் வீடுகளில் முசுலீம்கள் உயிரோடு தூக்கி வீசப்பட்டதைப் பார்த்தாள்; கால் வைத்த இடங்களில் எல்லாம் பிசுபிசுப்பான இரத்தம் தேங்கிக் கிடந்ததைப் பார்த்தாள்; இந்து மதவெறி பயங்கரவாதம் தாண்டவமாடிய அந்தப் பத்து நாட்களும் பிணவாடையைத்தான் சுவாசித்தாள். குல்னாரின் தந்தையின் பெயரும், சகோதரனின் பெயரும் இப்பொழுது கலவர பொழுது காணாமல் போனவர்களின் பட்டியிலில் உள்ளது. ஆண்டுகள் உருண்டோடியிருக்கலாம்; ஆனால், இந்து மதவெறி பாசிசப் பட்டாளம் ஊட்டிய பீதி, குல்னாரின் மனதில் அழியாது நிலைத்து விட்டது.

முசுலீம்கள் மட்டும்தானா? சக மனிதனை நேசிக்கும் ஒவ்வொருவனும் இந்து மத வெறியர்கள் நடத்தக் காட்டிய கொலை வெறியாட்டத்தை மறந்துவிட முடியாது.

''நாடு முழுவதும் புரிந்து கொள்ளச் செய்வோம்'' என்று தலைப்பிட்ட சாம்னா பத்திரிகையின் தலையங்கத்தில், ''அடுத்து வருகின்ற சில நாட்கள் நம்முடையவை'' என எழுதி, கலவரத்தை அதிகாரப் பூர்வமாகத் தொடங்கி வைத்தார், சிவசேனா தலைவர் பால் தாக்கரே.




பம்பாய் போலீசோ சட்டபூர்வ இந்து மதவெறி குண்டர் படையாக மாறி, சிவசேனாவின் ''தூய்மைப்படுத்தலுக்கு'' கை கொடுத்தது. ''பின்னால் சிவசேனா குண்டர்கள் ஆயுதங்களோடு எங்களைத் துரத்தி வருவார்கள்; முன்னால் போலீசு எங்கள் மார்பை குறிபார்த்துச் சுடும்'' என தப்பிப் பிழைத்த முசுலீம்கள் போலீசின் யோக்கியதையைத் தோலுரித்தனர். போலீசின் புள்ளி விவரப்படியே கலவரத்தின் பொழுது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியான 132 பேரில் 98 பேர் முசுலீம்கள்.

பத்தே நாட்களில் 1000-க்கும் மேற்பட்டோரைக் கொன்று குவித்து, 10,000 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தி, 4,000 கோடி பெறுமான சொத்துக்களை நாசப்படுத்தி, 40,000 பேரை சொந்த மண்ணிலேயே அகதிகளாக்கி, 4 இலட்சம் தொழிலாளர்களை பம்பாயை விட்டே துரத்தியடித்துவிட்டு, இந்துமதவெறி பயங்கரவாதம் தணிந்தது.

கலவரம் நடந்த பொழுது மாநில ஆட்சியில் இருந்த காங்கிரசு அரசாங்கம், இது பற்றி விசாரிக்க சிறீகிருஷ்ணா என்ற நீதிபதியின் தலைமையில் விசாரணைக் கமிசனை அமைத்தது. இக்கமிசன் கடந்த ஐந்து ஆண்டுகளாக விசாரணை நடத்தி, தனது இறுதி அறிக்கையை பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசிடம் கொடுத்துவிட்டது.

அதிகாரத்தில் இல்லாத பொழுது தான் நடத்திய மதவெறிப் படுகொலைகளை, இப்பொழுது அதிகாரத்தைப் பயன்படுத்தி மூடி மறைத்துவிடத் துணிகிறது இந்து மத வெறிக் கும்பல். தமிழகத்தில் கோவை குண்டு வெடிப்பு பற்றி தி.மு.க. அரசு வெளியிட்ட வெள்ளை அறிக்கை அரைகுறையானது எனப் புலம்பும் இப்பார்ப்பனக் கும்பல், சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கைக்கு தலைமைச் செயலகத்திலேயே சமாதி கட்டிவிட சதி வேலைகளில் இறங்கிவிட்டது.

மகாராட்டிரா மாநில சட்டசபைக் கூட்டம் நடந்த பொழுது, கமிசன் அறிக்கையை வெளியிடாததற்கு, தினமும் ஒரு சாக்கு போக்கை காரணமாகச் சொல்லி தப்பித்துக் கொண்டார்கள்; கமிசன் அறிக்கையை உடனே வெளியிடச் சொல்லித் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கு வந்தபொழுது, ''நாங்கள் விரும்பினால்தான் இந்த சட்டசபை கூட்டத் தொடரில் அறிக்கையை வெளியிடுவோம்'' எனத் திமிராகக் கூறினார்கள். இவ்வழக்கை விசாரித்த நீதிபதியே இந்த மதவெறிக் கும்பலின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்திக் கண்டித்தார். இப்பொழுதோ, அறிக்கையை மராத்தியில் மொழி பெயர்த்து, அதனுடன் கலவரம் தொடர்பாக நாங்கள் எடுத்த நடவடிக்கைகளையும் சேர்த்து வெளியிடுவோம்'' எனக் கூறி, தங்களை நியாயவானாகக் காட்டிட முயலுகிறது இந்த மதவெறிக் கும்பல்.




www.padippakam.com
படிப்பகம்



கமிசன் அறிக்கையை வெளியிடக் கோரும் முசுலீம் அமைப்புகளின் தலைவர்கள்

பாபர் மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதை வேடிக்கை பார்த்த காங்கிரசு கயவாளிகள், பம்பாய் நகரை பா.ஜ.க. - சிவசேனா குண்டர்களிடம் தூக்கிக் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டனர்.

அசல்பா, கபூர்கான் எஸ்டேட், மஹிம் பகுதியில் இருந்த முசுலீம்களின் குடிசைகள் எல்லாம் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இரானியர்கள் நடத்தி வந்த தேநீர்க் கடைகள், மாப்ளா முசுலீம்கள் நடத்தி வந்த மரக்கடைகள், உ.பி. முசுலிம்கள் நடத்தி வந்த ரொட்டிக் கடைகள் அனைத்தும் தீயில் எரிந்து சாம்பலாயின.

ஆயுதங்கள் - பெட்ரோல் டின்களுடன் சுற்றிக் கொண்டிருந்த சிவசேனா குண்டர்களின் கையில் சிக்கிக் கொண்ட முசுலீம்கள் - ஆண், பெண், குழந்தை, முதியவர் என வேறுபாடின்றி வெட்டிக் கொல்லப்பட்டனர்; அல்லது உயிரோடு எரிக்கப்பட்டனர்.



கலவரத்தால் வீடு - வாசல் - சுற்றத்தாரை இழந்து விட்ட முசுலீம் பெண்கள்: நீதி கிடைக்குமா?



கமிசன் அறிக்கையை வெளியிடக் கோரி மும்பையில் நடந்த சாலை மறியல்

உண்மையில், பம்பாய்க் கலவரம் தொடர்பாக இந்த மதவெறியர்கள் எடுத்த நடவடிக்கை எல்லாம் விசாரணைக் கமிசனை சீர்குலைக்க வேண்டும் என்பதில்தான் குறியாக இருந்தன.

● கலவரத்தின் பின் நடந்த பம்பாய்க் குண்டு வெடிப்புகளையும் சேர்த்து விசாரிக்க கமிசனுக்கு உத்தரவிட்டனர். இதன் மூலம் விசாரணையின் நோக்கத்தை நீர்த்துப் போகச் செய்தனர்.

● விசாரணை முடிவதற்கு முன்பாகவே, கமிசனுக்கு கால நீட்டிப்பு வழங்காமல், 95-ஆம் ஆண்டு இறுதியில் அதைக் கலைத்து விட்டனர். இதற்கு எதிராக நாடெங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன; ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அதன் பின்னர்தான் கமிசன் மீண்டும் நியமிக்கப்பட்டது.

● கலவரத்தின் பொழுது முசுலீம்களுக்கு எதிராக போலீசு இட்ட உத்தரவுகள் பதிவான போலீசுத் துறை ஒலிப் பேழைகளுள் பெரும்பாலானவை கமிசன் ஆராய்வதற்கு முன்பே அழிக்கப்பட்டன.

● கலவரம் தொடர்பாக பால் தாக்கரேக்கு எதிராக தொடுக்கப்பட்ட கிரிமினல் வழக்குகளின் ஆவணங்களை கமிசன் ஆராயத் தர மறுத்துவிட்டது.

● இக்கலவரம் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட 2,267 கிரிமினல் வழக்குகளில், 60 சதவீத வழக்குகளை, சாட்சியம் இல்லை என்ற காரணத்தைக் கூறி மூடிவிட்டது பம்பாய் போலீசு.

● தீர்ப்பு வழங்கப்பட்ட 42 வழக்குகளில் 8 வழக்குகளில்தான் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர். 853 வழக்குகள் ஆமை வேகத்தில் நகர்ந்து வருகின்றன.

இந்துக்களும், முசுலீம்களும் சகோதரர்களாகப் பழகி வந்து ஒரு கூட்டுத்துவ கலாச்சார அடிப்படையில் இயங்கி வந்த மும்பை நகரம், இன்று முசுலீம்பகுதி, இந்துப் பகுதி என இரண்டு கூறாகப் பிளவுண்டு கிடக்கிறது. மும்பை மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்றால் கலவரத்தைத் தூண்டி நடத்திய இந்து மதவெறிக் கொலைகாரர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

சிறீகிருஷ்ணா கமிசன் அறிக்கையை உடனே வெளியிடக் கோருவதோடு, அவ்வறிக்கை குற்றஞ் சாட்டியுள்ளதாகக் கூறப்படும் சிவசேனாவின் தலைவர் பால் தாக்கரே, அக்கட்சியைச் சேர்ந்த நான்கு அமைச்சர்கள் மற்றும் பல "ஷாகா" தலைவர்கள், சிவசேனா கட்சி பத்திரிகையான "சாம்னா"வின் நிர்வாக ஆசிரியர்கள் அனைவர் மீதும் கிரிமினல் வழக்கு தொடர்ந்து தண்டிக்கக் கோரியும் போராட வேண்டும்!

● செல்வம்


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




## முஸ்லிம் மதபோதகர் உயிருடன் எரிப்பு ஆர்.எஸ்.எஸ். குண்டர்களின் வெறியாட்டம்

நாங்கள் ஆளும் மாநிலங்களில் மதக் கலவரங்களே கிடையாது என்று இந்து வெறியர்கள் மார்தட்டி வரும் வேளையில், அண்மையில் இராஜஸ்தான் மாநிலத்தில் இந்து வெறியர்கள் நடத்தியுள்ள மதக்கலவரம், அவர்களது கோர முகத்தைத் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

இராஜஸ்தானில் சித்தூர்கர் நகருக்குச் சற்றுத் தொலைவிலுள்ள நவோகோன் கிராமத்தில் கடந்த ஏப்ரல் 4-ந் தேதியன்று பன்சிலால் என்ற இந்து இளைஞனுக்கும் இம்ரான்கான் என்ற முஸ்லிம் இளைஞனுக்கும் ஏற்பட்ட வாய்ச் சண்டை கைகலப்பாக முற்றி, இம்ரான்கான் பன்சிலாலை கத்தியால் குத்தியதில் அவன் மாண்டு போனான். கொல்லப்பட்ட பன்சிலால், இவ்வட்டாரத்தின் பிரபல ஆர்.எஸ்.எஸ். தலைவரான பிரமானந்தின் மகனாவான். அதன் பிறகு கேட்கவா வேண்டும்?

இளைஞர்கள் உணர்ச்சிவசப்பட்டு தாக்கிக் கொண்டு கொலையில் போய் முடிந்ததைக் கண்டிப்பதற்குப் பதிலாக, ஆர்.எஸ்.எஸ். கும்பல் இதற்கு மதச்சாயம் பூசி வெறியூட்டியது. ஊரிலுள்ள இந்துக்கள் மட்டுமின்றி அருகிலுள்ள பத்ரப்கார், அர்னோடு ஆகிய கிராமங்களிலிருந்தும் குண்டர்கள் திரட்டப்பட்டனர். கலவர மேகங்கள் சூழ்வதை அறிந்து 144 தடையுத்திரவு போடப்பட்டும் கூட ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் அதை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. போலீசாரும் அதைக் கண்டு கொள்ளவில்லை. ஏறத்தாழ 3000 பேர் கொண்ட குண்டர் படை கத்திகள், ஈட்டிகள், கோடாரிகள், தடிகள், தீப்பந்தங்களுடன் திரண்டதும், பாதுகாப்புக்காக நின்ற போலீசார் ஓடி ஒளிந்து கொண்டனர். இந்துவெறி குண்டர்படை 50 குடும்பங்களைக் கொண்ட சிறுபான்மை முஸ்லிம்களைக் கண்மூடித்தனமாகத் தாக்கத் தொடங்கியது. முஸ்லிம்களின் வீடுகள், வயல்கள், கிடங்குகள், மாட்டுக் கொட்டகைகள் என ஒன்றுவிடாமல் அனைத்தும் தீயிடப்பட்டன. பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்றும் பாராமல் அனைவரது கை, கால் எலும்புகள் முறிக்கப்பட்டன. பலரது மண்டையை கோடரியால் வெட்டிப் படுகாயப்படுத்தினர்.



இந்து வெறியாட்டத்தின் கோரம்: அமோத் பஜாரில் ஆர்.எஸ்.எஸ். குண்டர்களால் தீயிடப்பட்ட குறையாடப்பட்ட முஸ்லிம்களின் கடைகள்.

வயதான தம்பதிகளை மிருகத்தனமாக அடித்து உயிரோடு எரிக்க முற்பட்டபோது, சில ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், "இனி இந்த கிழட்டுத் தம்பதிகளுக்கு குழந்தை பிறக்காது; அதனால் விட்டு விடுவோம்" என்றனர். அதே சமயம் இளைஞர்களை காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினர். மற்றொரு கும்பல் அக்கிராம மசூதியைத் தாக்கி குறையாடியது. அங்கு மதப் பிரசங்கம் செய்ய வந்திருந்த மவுலானா அப்துல் ரகுமான் என்பவரைப் பிடித்து, கொடூரமாகத் தாக்கிய ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள், அவரை உயிரோடு எரித்துக் கொன்றனர்.

இந்துவெறி குண்டர்கள் வெறியாட்டம் போட்டுக் கொண்டிருந்த போது, அங்கு வந்த போலீசார் வானத்தை நோக்கிச் சுட்டு, கூட்டத்தைக் கலைக்க முற்பட்டனர். ஆனால் வெறிபிடித்த ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் போலீசாரையே திருப்பித் தாக்கி, போலீசு ஜீப்புகளைத் தீயிட்டுக் கொளுத்தினர். அதன் பிறகே போலீசு, கூட்டத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் ஒரு இந்துவெறியன் மாண்டு போனான். அதன் பிறகும் சாலை மறியல் போராட்டம் என ஆர்.எஸ்.எஸ். கும்பல் ரகளை செய்தது.

நூறாண்டுகளுக்கும் மேலாக இக்கிராமத்தில் ஒற்றுமையாக இந்து - முஸ்லிம்கள் வாழ்ந்ததை நினைவு கூறும் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரான அமீதுகான், பத்தாண்டுகளுக்கு முன்பு இங்கு ஆர்.எஸ்.எஸ். கால்பதித்த பிறகுதான் இரு சமூகத்தினரிடையே வெறுப்பும் சண்டையும் உருவாக்கப்பட்டது என்று வேதனையுடன் கூறுகிறார். "இன்று இக்கிராமத்தில் பெரும்பாலான முஸ்லிம்கள் ஊரை விட்டே ஓடிவிட்டனர். நான் பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு என்னால் செல்ல முடியாது; நான் இந்த கிராமத்திலேயே சாக விரும்புகிறேன்" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறுகிறார், 29 ஆண்டுகளாக தொடர்ந்து பஞ்சாயத்து தலைவராக உள்ள அவர்.

பன்சிலாலைக் குத்திக் கொன்ற இம்ரான்கான் கைது செய்யப்பட்டுள்ள அதேசமயம், மவுலானாவைக் கொன்ற, முஸ்லிம்களைத் தாக்கி வெறியாட்டம் போட்ட ஆர்.எஸ்.எஸ். குண்டர்கள் ஒருவர் கூட கைது செய்யப்படவில்லை. இந்துவெறியர்கள் ஆளும் இராஜஸ்தானின் சட்டமும் நீதியும் இதுதான்!

## "இரத்த ஹோலி" மராத்தா சாதிவெறிக் கொடூரம்

மார்ச் 13; அன்று ஹோலிப் பண்டிகை நாள். வண்ணப் பொடிகளைத் தூவி மேல்சாதியினர் கோலாகலமாக அப்பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். ஆனால் அதேநாளில் மகாராட்டிராவின் யாவத்மால் மாவட்டத்திலுள்ள தோனோடா கிராமத்து மராத்தா சாதிவெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளைத் தீயிட்டுக் கொளுத்தி, இரு தாழ்த்தப்பட்ட இளைஞர்களை வெட்டிக் கொன்று அத்தீயில் வீசியெறிந்து தமது ஹோலிப் பண்டிகையைக் கொண்டாடியுள்ளனர்.

உதிரத்தை உறையச் செய்யும் இக்கொடூரம் மராத்தா சாதிவெறியர்களால் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது. "இரத்த ஹோலி"யை நடத்துவதற்காக முன் கூட்டியே பெருமளவு மண்ணெண்ணெய் வாங்கி அவர்கள் சேமித்து வைத்தனர். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பு அருகே பெருங்குவியலாக கற்களைக் கொண்டு வந்து கொட்டி வைத்தனர். ஹோலிப் பண்டிகை நாளுக்கு முன்பாகவே தமது மனைவி - மக்களை வெளியூர்களுக்கு அனுப்பி வைத்தனர். திட்டமிட்டப்படியே கற்களாலும் தடிகளாலும் தாழ்த்தப்பட்டோரைத் தாக்கி விரட்டி விட்டு, குடியிருப்புகளைச் சூறையாடி மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொளுத்தினர். தடுக்க வந்தோரையும் தீயை அணைக்க முயன்றவர்களையும் மிருகத்தனமாகத் தாக்கினர். இக்கிராமப் பஞ்சாயத்துத் தலைவியின் மைத்துனர்களான இரு தாழ்த்தப்பட்ட இளைஞர்களைச் சுற்றி வளைத்துத் தாக்கி, பட்டப்பகலில் கழுத்தை வெட்டிக் கொன்று, உடல்களை எரியும் தீயில் வீசியெறிந்தனர். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகள் மட்டுமின்றி, அவர்களுக்குச் சொந்தமான மாவு அரவை ஆலை, மளிகைக் கடைகள் முதலான சிறு வியாபார நிறுவனங்களையும் சூறையாடி தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

இக்கொடூரத் தாக்குதலுக்கு மேல்சாதி வெறியே காரணம் என்றாலும், தாழ்த்தப்பட்டோர் முன் போலின்றி தற்போது கல்வியிலும் பொருளாதாரத்திலும் சற்றே முன்னேறி உள்ளதைக் கண்ட ஆத்திரமே வெறியாக மாறியிருக்கிறது. இக்கிராமத்தில் தாழ்த்தப்பட்டோரில் கணிசமானோர் கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். சிலர் நகர்ப்புறங்களில் வேலைக்குச் சென்று பொருளாதார ரீதியாக சற்றே முன்னேறியுள்ளனர். நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் உபரியாகக் கிடைத்த நிலங்களில் ஒரு பகுதி தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டு அதில் அவர்கள் பயிரிட்டு வருகின்றனர். தனித் தொகுதியிலுள்ள இக்கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண் பஞ்சாயத்துத் தலைவராக சில ஆண்டுகளுக்கு முன் தேர்ந்தெடுக்கப்பட்டார். தமக்கு அடிமையாக வாழ்ந்தவர்கள் இன்று தமக்குச் சமமாக வந்து விட்டார்களே என்ற ஆத்திரத்தில் மேல்சாதி வெறியர்கள் திட்டமிட்டு இந்த இரத்த ஹோலியை நடத்தியுள்ளனர். படுகாயங்களுடன் உயிர் பிழைக்கத்



படிப்பகம்

www.padippakam.com



தப்பியோடிய தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னமும் இக்கிராமத்துக்குத் திரும்பவில்லை. அந்த அளவுக்கு சாதிவெறியர்களின் கொட்டம் இன்னமும் நீடிக்கிறது.

## தீவிரமாகி வரும் தற்கொலைகள் தனியார்மய - தாராளமயத்தின் 'சாதனை'!

அண்டை மாநிலமான கேரளத்தில் தீவிரமாகி வரும் தற்கொலைகளைக் கண்டு ஆட்சியாளர்களும் மனவியல் - சமூகவியலாளர்களும் செய்வதறியாது கையைப் பிசைந்து கொண்டு நிற்கின்றனர். கேரளத்தில் 1992 ஏப்ரல் முதல் 1997 மார்ச் முடிய ஐந்தாண்டு காலத்தில் 41,397 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். அதாவது, ஒரு நாளைக்கு சராசரியாக 22 பேர் தற்கொலையால் மாண்டு போகின்றனர். இந்தப் போக்கு கடந்த ஈராண்டுகளில் மேலும் தீவிரமாகியுள்ளது. 1996 மார்ச் முதல் 1998 மார்ச் முடிய இரண்டாண்டுகளில் மட்டும் 15,200 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இது கேரள முதல்வரே சட்டமன்றத்தில் அறிவித்த புள்ளிவிபரக் கணக்கு. இயற்கையான சாவு என்று போலீசாரிடம் கூறி மறைக்கப்பட்ட இதர தற்கொலைகளையும் கணக்கிட்டால் இதன் அளவு மிகப் பெரியதாக இருக்கும் என்று பத்திரிகைகளே எழுதுகின்றன.

விரக்தி, ஏமாற்றம், தோல்வி, கடன் சுமை, வாழ்க்கையில் நம்பிக்கையின்மை, பெருந்துயரம் முதலானவைகளே தற்கொலைக்குக் காரணம் என்றாலும், அது தீவிரமடையக் காரணம் என்ன என்று புரியாமல் மனவியலாளர்கள் விழிப் பிதுங்கி நிற்கின்றனர். மனவியல் மருத்துவமனைகளுக்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை பெருகுகிறது; சிறுநகர மனவியல் மருத்துவமனைகளில் கூட படுக்கைகள் நிரம்பி வழிகின்றன; படித்தவர்கள் நிறைந்த மாநிலத்தில் இப்படியொரு நிலைமை ஏற்பட்டு விட்டதே என்று பத்திரிகைகள் அரற்றுகின்றன.



கஜானாவைச் சூறையாடி கழுத்திலே நோட்டு மாலையுடன் காட்சி தரும் உ.பி.யின் இந்து வெறி முதல்வர் கல்யாண்சிங்

எந்த ஆண்டிலிருந்து புள்ளி விபரக் கணக்கு எடுக்கப்பட்டதோ அதே ஆண்டில் தான் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. ஐந்தாண்டுகளில் அதன் விளைவுகள் என்ன என்பதை தீவிரமாகி வரும் தற்கொலைகளே நிரூபித்துக் காட்டிவிட்டது. புதிய பொருளாதாரக் கொள்கை உருவாக்கிய நுகர்பொருள் கலாச்சாரத்தால் ஏற்பட்ட கடன் சுமை, குடும்பத் தகராறுகள்; பங்குச் சந்தை சூதாட்டத்தில் தமது சேமிப்புகளை இழந்து நடுத்தர வர்க்கத்தினர் நட்டமடைவது; வீட்டுமனை நிலங்களில், பண்ணை பழத் தோட்டங்களில் முதலீடு செய்துவிட்டு, மறுவிற்பனை செய்ய முடியாமல் தேக்கநிலையால் ஏற்படும் பாதிப்பு; அரபுநாட்டு வேலையை நம்பி அகலக் கால் வைத்துவிட்டு, வேலை இழந்து நாடு திரும்புவதால் ஏற்படும் விரக்தி; ரப்பர், மிளகு, ஏலக்காய் முதலான பணப் பயிர்களின் விலை வீழ்ச்சியால் உற்பத்தி தேக்கமும் வேலையின்மையும் என அடுத்தடுத்து தொடரும் பொருளாதாரத் தாக்குதலின் விளைவாகவே தற்கொலைகள் பெருகுகின்றன.

## கஜானாவைச் சூறையாடும் இந்துவெறிக் கயவாளிகள்

அரசு சன்மானங்களைப் பொறுக்கித் தின்பதையும் கஜானாவைக் காலி செய்வதையுமே இலட்சியமாகக் கொண்ட பாரதீய ஜனதா கூட்டணி அரசாங்கம் உத்திரப் பிரதேச மாநிலத்தையே சூறையாடி வருகிறது. 'வரலாறு காணாத' 95 பேர் கொண்ட அம் மாநில அமைச்சரவையில் தமது பங்குக்குப் போதிய அளவு எலும்புத்துண்டு கிடைக்காத ஆத்திரத்தில், அமைச்சர்கள் நாய்ச் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உ.பி.யில் கல்யாண் சிங் தலைமையிலான பாரதீய ஜனதா கூட்டணி அரசு பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்ததையொட்டி பல லட்சக்கணக்கில் செலவிட்டு விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. அடுத்த இரு நாட்களில் சபாநாயகர் கேசரிநாத், பகுஜன் சமாஜ் கட்சியிலிருந்து பாரதீய ஜனதாவுக்கு ஆதரவாக கட்சி மாறிய ஜனதாந்திரிக் பகுஜன் சமாஜ் கட்சியினரை கட்சித் தாவல் தடுப்புச் சட்டத்தின் கீழ் எம்.எல்.ஏ. பதவியைப் பறிக்க மாட்டேன் என்றும் அவர்கள் தனிக் கட்சியாக நடத்தப்படுவார்கள் என்றும் அறிவித்தார். இந்த வெற்றியை இலட்சக்கணக்கில் செலவிட்டு பாரதீய ஜனதா கூட்டணி கோலாகலமாகக் கொண்டாடியது.

உ.பி.யில் பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணியிலிருந்து விலகி கட்சி மாறிகளைக் கொண்ட புதிய கூட்டணி அரசாங்கம் உருவானதும், அமைச்சக செலவுகளுக்கான நிதியிலிருந்து அவசரத் தேவைக்காக ரூ. 10.12 கோடி ஒதுக்கப்பட்டது. இதுவும் போதாமல் பின்னர் துணை மானியமாக ரூ. 5.22 கோடியும், அதன் பிறகு ரூ. 4.1 கோடியும் ஒதுக்கப்பட்டன. இவை அனைத்தும் அமைச்சர்களின் மாளிகைகளைப் புதுப்பித்து அழகுபடுத்தவும், புதிய கார்கள் வாங்கவும் அவற்றின் பெட்ரோல் செலவுகளுக்குமே ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த ஒன்றரை ஆண்டுக்குள் 60 கார்களும், 5 ஜிப்சி கார்களும் அமைச்சர்களுக்காக வாங்கப்பட்டு தனிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு மாதத்தில் அமைச்சர்களின் கார்களுக்கான பெட்ரோல் செலவுக்காக மட்டும் ரூ. 22 லட்சம் விரயமாக்கப்பட்டுள்ளது.

இந்த ஊதாரித்தனங்களுக்கு சிகரம் வைத்தாற்போல முதல்வர் கல்யாண்சிங் தனது மூன்று மாளிகைகளை ஏறத்தாழ ரூ. 1 கோடிக்கு மேல் செலவிட்டு ஆடம்பரமாகப் புதுப்பித்துள்ளார். ஒவ்வொரு வீட்டிலும் தொலைபேசி, வண்ணத் தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, பளிங்குக் கல் பதித்த சுவர், உயர்தர படுக்கை, மேசை நாற்காலிகள், நீச்சல் குளம் என ஆடம்பர வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்ற 94 அமைச்சர்களுக்கு தமது வீடு - வாகனங்களைப் புதுப்பிக்க ரூ. 17 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகை போதாது, இன்னும் கூடுதலாக வேண்டும் என்று அமைச்சர்கள் போர்க்கொடி தூக்குகின்றனர். தமது துறைக்கும் வாரியங்களுக்கும் கூடுதல் மானியம் ஒதுக்குமாறு கலகம் செய்கின்றனர்.

இதுதவிர, கடந்த பிப்ரவரியில் லோக்தந்திர காங்கிரசுக் கட்சி, கூட்டணியிலிருந்து விலகி கலகம் செய்தபோது பாரதீய ஜனதாவை ஆதரித்து ஆட்சியைக் காப்பாற்றிய எம்.எல்.ஏ.க்களுக்கு மந்திரி பதவியளிக்க வேண்டியுள்ளது. அல்லது புதிய வாரியங்களை உருவாக்கி தலைவர் பதவியளிக்க வேண்டியுள்ளது.

முந்தைய மாயாவதி ஆட்சியின் போது, அவர் அம்பேத்கார் சிலைகளையும் பூங்காக்களையும் நிறுவிய போது, "ஐயோ! அரசு நிதியை இப்படி விரயமாக்குகிறாரே!" என்று பார்ப்பன - மேல்சாதிக் கும்பல் கூச்சலிட்டது. இப்போது கருவூலத்தையே சூறையாடி வரும் பாரதீய ஜனதா பொறுக்கிக் கூட்டணியின் கொட்டத்தைக் கண்டு வாய் திறக்க முடியாமல் பார்ப்பன கும்பல் பரிகாசமாக நிற்கிறது.

## ஆதிவாசி நிலங்களை அபகரிக்க குஜ்ஜார் சாதிவெறி பயங்கரம்

மத்தியப் பிரதேசத்தில் ஆதிவாசி மக்களின் நிலங்களை அபகரிக்க குஜ்ஜார் சாதிவெறியர்கள் நடத்தியுள்ள பயங்கரவாத வெறியாட்டத்தால் மோரீனா மாவட்டமே பீதியில் உறைந்து போயுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 8-ம் நாளன்று மோரீனா மாவட்டத்திலுள்ள ராஜ்புரா கிராமத்திற்கு 7 பேர் கொண்ட கும்பலாக வந்த குஜ்ஜார் சாதிவெறியர்



படிப்பகம்

www.padippakam.com



கள், கிராம மக்களை மிருகத்தனமாகத் தாக்கியதோடு இரு பெண்களையும் 11 வயது சிறுமியையும் பகிரங்கமாகக் கடத்திச் சென்றனர். இவர்களை வெவ்வேறு கிராமங்களில் மறைத்து வைத்து கும்பலாகப் பாலியல் வன்முறையை ஏவினர். பின்னர் இவர்களை ரூ. 15,000 வீதம் விபச்சார விடுதிக்கு விற்கவும் முயற்சி செய்தனர்.

ஆதிவாசி மக்களின் நிலங்களைக் கைப்பற்ற மோசடிகள் மூலமும், நைச்சியமாகவும் மிரட்டியும் பணிய வைக்க முடியாதபோது, குஜ்ஜார் சாதிவெறி நிலப்பிரபுக்கள் இத்தகைய பயங்கரத்தைக் கட்டவிழ்த்து விடுவது, அண்மைக் காலமாகப் பெருகி வருகிறது. ஏற்கனவே குவாலியர், சிவபுரி மாவட்டங்களில் இத்தகைய கொடூரம் கேள்வி முறையின்றி தொடர்கிறது. தற்போது ராஜ்புரா கிராமத்தில் நடந்த கொடூரத் தாக்குதலுக்குப் பிறகு, ஆதிவாசி மக்கள் பயபீதியில் அக்கிராமத்தை விட்டு வெளியேறி அண்டையிலுள்ள கிராமங்களில் தஞ்சமடைந்தனர்; அங்குள்ள தன்னார்வக் குழுக்களிடம் முறையிட்ட பின்னரே, மெதுவாக இக்கொடூரம் வெளி உலகுக்குத் தெரிய வந்துள்ளது. தன்னார்வக் குழுக்களின் உண்மை கண்டறியும் குழு, குஜ்ஜார் சாதிவெறி குண்டர்களின் அட்டூழியம் பற்றியும் ஆதிவாசி மக்கள் பயபீதியில் உள்ளதைப் பற்றியும் அம்பலப்படுத்தியதைத் தொடர்ந்து, பத்திரிகைகளில் செய்தியாக வெளிவந்து பொதுமக்களின் நிர்பந்தம் பெருகியதும், குற்றவாளிகளில் ஒரு சிலரை மட்டும் போலீசார் கைது செய்துள்ளனர். சாதிய பலம், ஓட்டுக் கட்சிகளின் ஆதரவு காரணமாக முக்கிய புள்ளிகள் கைதாகாமல் சுதந்திரமாகத் திரிகின்றனர். பாதிக்கப்பட்ட பெண்களும் சிறுமியும் உயிரோடு திரும்பி வந்ததே பெரிய விசயம் என்று போலீசார் வழக்கை கிடப்பில் போட்டு விட்டனர்.

## யாருடன் கூட்டு? 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள் குழுச் சண்டை

கழுதை விட்டையில் முன் விட்டை எது, பின் விட்டை எது என்று தேடுவதைப் போல, ஆளும் வர்க்கக் கட்சிகளிலே முற்போக்கு எது, பிற்போக்கு எது என்று ஆராய்ச்சி செய்வது; அவற்றில் முற்போக்குக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஓட்டுப் பொறுக்கி, பிற்போக்கு சக்திகளை வீழ்த்துவதாக நாடகமாடுவது; — இது இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் நீண்டகாலமாகப் பின்பற்றிவரும் செயல்தந்திரம். நேற்று வரை ஜனதா தளம் - தேசிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து காங்கிரசையும் பாரதீய ஜனதாவையும் எதிர்த்து வந்த மார்க்சிஸ்டுகள் இப்போது, காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து பாரதீய ஜனதாவை வீழ்த்தலாமா என்று தீவிரமாக ஆலோசித்து வருகின்றனர். இதையொட்டி ஆதரவு, எதிர்ப்பு என்று இரு கோஷ்டிகளாகப் பிளவுபட்டு, மார்க்சிஸ்டு கட்சிக்குள் பூசல் முற்றியுள்ளது.



இப்போலி கம்யூனிஸ்டுகள் ஆட்சி செய்யும் கேரளாவிலும் திரிபுராவிலும் பாரதீய ஜனதா கட்சி எதிர்த்தரப்பில் இருந்தாலும், ஆட்சியைக் கைப்பற்றுமளவுக்கு பலம் பெற்று வருகிறது. மே.வங்கத்தில் திரிணாமுல் காங்கிரசு கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள பாரதீய ஜனதா, மார்க்சிஸ்டு ஆட்சியை தேர்தலில் வீழ்த்த தீவிரமாக முயற்சித்து வருகிறது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இக்கூட்டணி இரண்டாம் இடத்திற்கு வந்து, சோனியா காங்கிரசை மூன்றாவது இடத்திற்குத் தள்ளி விட்டுள்ளது.

இதனால் பீதியடைந்துள்ள மார்க்சிஸ்டு கட்சியில் ஒரு பிரிவினர், சோனியா காங்கிரசுடன் செயல் தந்திர ரீதியாகக் கூட்டுச் சேரலாம் என்று வாதிடுகின்றனர். அது கூடாது; சோனியா காங்கிரசு, பாரதீய ஜனதா இரண்டுமே எதிரிகள் தான் என்று மற்றொரு பிரிவு எதிர்க்கிறது. இந்த லடாய் இப்போது -மிகப்பெரிய சித்தாந்தப் போராட்டமாக மாறியுள்ளது. கடந்த ஏப்ரலில் நடந்த மார்க்சிஸ்டு கட்சியின் அரசியல் தலைமைக் குழு கூட்டத்தில் இந்த விவகாரம் வெளிப்படையான கோஷ்டிச் சண்டையாக முற்றி, எந்த முடிவும் எடுக்க முடியாமல் கூட்டம் கலைந்துள்ளது.

காங்கிரசுடன் நேரடியாக கூட்டணி சேராத அதேசமயம், உள்ளூர் அளவில் தொகுதி உடன்பாடு செய்து கொள்ளலாம் என்றும் வரப்போகும் மே.வங்க பஞ்சாயத்து தேர்தலில் இதைச் செயல்படுத்தலாம் என்றும் ஜோதிபாசு கோஷ்டி நைச்சியமாக முன்வைத்தது. நாயனார், பிரகாஷ்கரத் கோஷ்டியோ இதைக் கடுமையாக எதிர்த்தது. உடனே, முஸ்லிம்கள் நிறைந்த மலப்புரம் மாவட்டத்தில் இஸ்லாமிய அடிப்படைவாத சக்திகளுடன் நாயனார் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதாக பாசு கோஷ்டி குற்றம் சாட்டியது. இதேபோல, கேரள மார்க்சிஸ்ட் கட்சிச் செயலாளரான அச்சுதானந்தன், லத்தீன் கத்தோலிக்க சமூகத்தினரிடம் இணக்கமாக நடந்து கொள்வதாகச் சாடியது. அரசியல் தலைமைக் குழுவில் கேரள முதல்வர் நாயனார், பிரகாஷ் கரத், அச்சுதானந்தன், பினாய் சௌத்திரி, பாலானந்தன், கங்காதர் ராவ், உமாநாத் ஆகியோர் காங்கிரசுடன் கூட்டுச் சேருவதற்கு எதிர்ப்பு நிலை எடுத்தும், பொதுச்செயலாளர் சுர்ஜித், மே. வங்க முதல்வர் ஜோதிபாசு, சீதாராம் எச்சூரி, இராமச்சந்திரன் பிள்ளை ஆகியோர் காங்கிரசுடன் கூட்டுச் சேருவதற்கு ஆதரவு நிலை எடுத்தும் இருகூறாகப் பிளவுபட்டு நிற்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, நாடாளுமன்ற ஜனநாயகம் எனும் செக்கை இழுக்கும் மாடாகிவிட்ட மார்க்சிஸ்ட் கட்சி திரிபுரா, மே. வங்கத்தைத் தவிர கேரளாவில் கூட அறுதிப் பெரும்பான்மை பெற முடியாமல், வேறெந்த மாநிலத்திலும் காலூன்றக் கூட முடியாமல், தேக்க நிலையை எட்டி விட்டது. 'இடதுசாரி' கட்சிகளின் ஓட்டு பலம் 1991 தேர்தலில் 6.16% ஆக இருந்து 1996-ல் 6.12% ஆகவும், நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 5.18% ஆகவும் சுருங்கிக் கொண்டே வருகிறது. மேலும் கடந்த இரு தேர்தல்களில் 'இடதுசாரி' எம்.பி.க்களின் எண்ணிக்கை 32-ஐத் தாண்டவில்லை. கேரளா, மே.வங்க தலைநகரத் தொகுதிகளில் 'இடதுசாரிகள்' ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. இந்நிலையில் காங்கிரசுடனும் ஐக்கிய முன்னணியுடனும் சந்தர்ப்பவாதக் கூட்டணி சேருவதைத் தவிர போலி கம்யூனிஸ்டுகளுக்கு வேறு மாற்று வழியும் இல்லை.

ஆனால், அண்மைக் காலமாக காங்கிரசு எதிர்ப்பு அரசியல் நடத்திவிட்டு இப்போது அதனுடன் கூட்டுச் சேர்ந்தால் தமது சந்தர்ப்பவாதம் பளிச்சென அம்பலமாகிவிடும் என்பதாலேயே நாயனார் - கரத் கோஷ்டி எதிர்ப்புக் காட்டுகிறது. மேலும் இடதுசாரி கூட்டணியிலுள்ள புரட்சி சோசலிஸ்டு கட்சி, பார்வர்டு பிளாக் முதலான கட்சிகள் காங்கிரசுடன் கூட்டுச் சேருவதற்கு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இந்நிலையில் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்தால் இடதுசாரி முன்னணியே பிளவுபட்டுப் போய்விடும் என்பதாலேயே நாயனார் - கரத் கோஷ்டி காங்கிரசு எதிர்ப்பு வீரம் காட்டுகிறது. மற்றபடி, மாற்றுக் கொள்கையோ திட்டமோ அதனிடம் கிடையாது. பொருத்தமான, மூடி மறைக்கப்பட்ட சந்தர்ப்பவாதக் கொள்கைகளை உருவாக்கிக் கொண்டு, நாளை இந்த கோஷ்டியும் காங்கிரசுடன் கூட்டுச் சேர ஒருபோதும் தயங்காது.

## புரட்சியாளர்களைக் கொலை செய்தால் கூலி! நாயுடு அரசின் கசாப்புக் கொள்கை

'போலீசுடன் மோதல்' என்ற பெயரில் கம்யூனிசப் புரட்சியாளர்களை நரவேட்டையாடி அம்பலப்பட்டு, தனிமைப்பட்டுப் போயுள்ள ஆந்திர பயங்கரவாத போலீசு, இப்போது ஒரு புதிய



படிப்பகம்

www.padippakam.com



உத்தியுடன் தனது கொலை வெறியாட்டத்தைத் தொடர்கிறது. நக்சல் பாரி புரட்சி இயக்கத்தில் தமது கூலிக் கொலைகாரர்களை ஊடுருவச் செய்து முக்கிய தலைவர்களைச் சுட்டுக் கொல்வது; இக்கொலைகாரர்களுக்கு அரசின் சார்பில் சன்மானங்களும் பரிசும் அளித்து பாதுகாப்பது என்கிற திட்டத்தை அது அரங்கேற்றத் தொடங்கியுள்ளது.

ஆந்திராவின் நக்சல்பாரிப் புரட்சியாளர்களான மக்கள் யுத்தக் குழு, நலகொண்டா மாவட்டம் பேரலகுட்டாகிராமம் அருகே ஒரு தற்காப்பு தளத்தை நிறுவியுள்ளது. இந்த தளத்தில் செயற்பட்டு வந்த சோமியா நாயக் என்பவன், இத்தற்காப்புக் குழுவின் தளபதியான தோழர் ராமண்ணா, அவரது மனைவி சொர்ணக்கா மற்றும் இரு தோழர்களை கடந்த ஏப்ரல் 4-ந் தேதியன்று சுட்டுக் கொன்றுவிட்டு போலீசில் சரணடைந்தான். லம்பாடி இனத்தைச் சேர்ந்த தனக்கு உரிய அளவு உணவு தராமல் சிறுமைப்படுத்தியதாகவும், இதை எதிர்த்து வாதாடியபோது தன் மீது தள உறுப்பினர்கள் துப்பாக்கியால் சுட்டு மிரட்டியதாகவும் அதனாலேயே அவர்களைக் கொன்றொழித்ததாகவும் இவன் கூறுகிறான். இக்கொலைகளைப் பற்றி எந்த விசாரணையும் நடத்தாத ஆந்திர அரசு, தனது சகாக்களையே சுட்டுக் கொன்ற இக்கொலைகாரனுக்கு ரூ. 3.40 லட்சம் பரிசளித்துள்ளது. கொல்லப்பட்டவர்களின் தலைக்கு ஏற்கனவே ஆந்திர அரசு விலை வைத்திருந்ததாகவும், அந்தத் தொகையையே சோமியா நாயக்கின் மறுவாழ்வுக்காகக் கொடுத்துள்ளதாகவும் ஆந்திர அரசு வெட்கமின்றி நியாயவாதம் பேசுகிறது.



சூரஜ் மண்டல், ஷிபு சோரன்: இலஞ்சம் வாங்கிக் கொண்டு காங்கிரசுக்கு விலைபோன ஜார்கந்து கட்சி எம்.பி.க்கள். உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி இன்று 'நிரபராதிகள்'

இதேபோல, கடந்த ஏப்ரல் 12-ந் தேதியன்று மக்கள் யுத்தக் குழுவின் கரீம் நகர் மாவட்டச் செயலாளரான தோழர் ரமேஷ் என்பவரை நாகராஜு என்ற போலீசின் கையாள் சுட்டுக் கொன்றான். இந்த நாகராஜு 1996-ம் ஆண்டின் இறுதியில் கைதாகி 9 மாதம் சிறையிலிருந்துவிட்டு, பின்னர் போலீசின் ஏற்பாட்டின்படி விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் ம.யு. குழுவில் ஊடுருவினான். முக்கிய தலைவர்களின் மெய்க் காவலனாகச் செயல்பட்டு அவர்களின் நம்பிக்கையைப் பெற்றான். ஏப்ரல் 12 அன்று ராமகிரி கோட்டை அருகிலுள்ள காட்டுப் பகுதியில் கரீம் நகர் மாவட்டத்தின் 4 தற்காப்புக் குழுக்களின் வீரர்கள் அரசியல், இராணுவப் பயற்சிக்காக வந்தபோது, தோழர் ரமேசுடன் வாக்குவாதம் செய்த நாகராஜு அவரைச் சுட்டுக் கொன்று தப்பியோடி போலீசிடம் சரணடைந்தான். அவனுக்கு ஆந்திர அரசு ரூ. 10.2 லட்சம் பரிசளித்து பாதுகாத்து வருகிறது. உலகின் மிகக் கொடிய சர்வாதிகாரிகள் கூட செய்யத் துணியாத பாசிசக் காடைத்தனம் இது!

ஆந்திர பயங்கரவாதப் போலீசார் செயல்படுத்திவரும் இந்த உத்தி புதியதல்ல; ஏற்கனவே காஷ்மீரில் இதே உத்தியுடன் போலீசின் கூலிக் கொலைகாரர்கள் போராளிகளைக் கொன்றொழித்து, பின்னர் இந்த விவகாரம் அம்பலப்பட்டது. ஆனால் இக்கொலைகாரர்களுக்கு அரசே பரிசளித்து அவர்களைப் பாதுகாப்பது இந்தியாவில் வேறெங்கும் இப்படி வெளிப்படையாகவும் வக்கிரமாகவும் இதுவரை நடந்ததில்லை.

## எம்.பி.க்களின் லஞ்ச ஊழலுக்கு நீதித்துறையின் அங்கீகாரம்

கடந்த ஜூலை '93-ல் ஜார்கந்து முக்தி மோர்ச்சா கட்சியின் 4 எம்.பி.களுக்கும் அஜித்சிங் தலைமையிலான பிளவுபட்ட ஜனதா தளக் கட்சியின் 7 எம்.பி.களுக்கும் 8.7 கோடி ரூபாய் லஞ்சம் கொடுத்து அன்றைய பிரதமர் நரசிம்மராவ் தனது சிறுபான்மை அரசைக் காப்பாற்றிக் கொண்டார். இதையொட்டி லஞ்சம் கொடுத்தவர்கள் - வாங்கியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு, சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு பின்னர் உச்ச நீதிமன்றம் தலையிட்டு கடந்த ஏப்ரல் 12-ந் தேதியன்று எம்.பி.க்களின் லஞ்ச ஊழலுக்கு சட்டபூர்வ அங்கீகாரமளிக்கும் ஒரு அயோக்கியத்தனமான தீர்ப்பை வழங்கியுள்ளது.

''இலஞ்சம் வாங்கிக் கொண்டு ஒரு எம்.பி. நாடாளுமன்றத்தில் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடலாம். அச்செயல் குற்றமாகக் கருதப்படாது. இலஞ்சம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம்; அதேசமயம் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் சுதந்திரமான செயல்பாட்டை நீதிமன்றம் கட்டுப்படுத்தாது. சட்டத்தின் 105 (2)-வது விதியின்படி நாடாளுமன்ற உறுப்பினர் சுதந்திரமாக செயல்பட முழு உரிமை உள்ளது. அதில் நீதித்துறை தலையிடாது'' என்று அப்பட்டமாகத் தெரிந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் மோசடி - அயோக்கியத்தனத்துக்கு உச்ச நீதிமன்றம் அங்கீகாரமளித்துள்ளது.

முன்னாள் பிரதமர் மீது இந்தியாவில் நடக்கும் லஞ்ச ஊழல் மோசடி வழக்கு இதுதான். இதில் லஞ்சப்பணம் பட்டுவாடா செய்யப்பட்ட முறை, வங்கிக் கணக்கு, லஞ்சம் கொடுத்ததையும் வாங்கியதையும் மறைக்க நடந்த சதிகள் அனைத்தும் அம்பலமாகியது. ஜார்கந்து முக்தி மோர்ச்சா கட்சியின் லஞ்சம் பெற்ற எம்.பி.யான ஷைலேந்திர மஹ்டோ ''அப்ரூவராக'' மாறி சாட்சியுமளித்தார். இத்தனைக்கும் பிறகும் லஞ்சம் கொடுத்ததும் வாங்கியதும் வேறு விவகாரம்; நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாட்டு உரிமை வேறு விவகாரம் என்கிறது உச்ச நீதிமன்றம். லஞ்சம் கொடுத்தவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அதே சமயம் லஞ்சம் வாங்கியவர்கள் நாடாளுமன்றத்தில் செயல்பட முழு உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் கூறுகிறது. இதன்படி லஞ்சம் வாங்கிக் கொண்டு சிறுபான்மை ராவ் அரசைக் காப்பாற்றிய எம்.பி.க்களின் மீது இனி வழக்கோ, விசாரணையோ கிடையாது. அவர்கள் குற்றமற்ற பொதுநல ஊழியர்கள்!

அரசியல் சட்டத்தின் 105(2)-வது விதிகளைக் காட்டி குற்றவாளிகளைக் காப்பாற்றுவது சரியல்ல என்று உச்சநீதிமன்ற அமர்வுக் குழுவில் சிறுபான்மையாக உள்ள ஆனந்த், அகர்வால் ஆகிய நீதிபதிகள் முரண்படுகின்றனர். ஆனால் அமர்வுக் குழுவில் பரூச்சா, ராஜேந்திரபாபு, ஜி.என்.ரே ஆகிய பெரும்பான்மை நீதிபதிகள் எம்.பி.க்கள் லஞ்சம் பெறுவதை நாடாளுமன்ற உரிமை விவகாரத்தின் ஓர் அங்கமாகத் தீர்ப்பளித்துள்ளனர். இனி எந்தவொரு சிறுபான்மை அரசும் லஞ்சம் கொடுத்து கட்சிகளை உடைத்து எம்.பி.களை விலைபேசி தமக்கு ஆதரவாக மாற்றிக் கொள்ளலாம். அதில் தவறில்லை. ''லஞ்சம் வேறு; எம்.பி.க்களின் உரிமை வேறு. இரண்டையும் முடிச்சுப் போடக்கூடாது. திருடன் நல்லொழுக்க உபதேசம் செய்தால் அதில் தவறில்லை. திருட்டு என்பது குற்றம். அதேசமயம் உபதேசம் செய்வது அவனது உரிமை. அதைத் தடுக்கக் கூடாது'' என்பதுதான் உச்சநீதிமன்றத் தீர்ப்பின் சாரம்.

நாளை ஒரு பன்னாட்டு நிறுவனத்திடம் கையூட்டுப் பெற்றுக் கொண்டு, அதற்கு ஆதரவாக நாட்டைத் திவாலாக்கும் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து எம்.பி.க்கள் கும்பலாக வாக்களிக்கலாம். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாம். உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அதுவும் நாடாளுமன்ற உரிமையாகிவிடும்.

●○●



படிப்பகம்

www.padippakam.com

# பா.ஜ.க.வின் சுதேசி சாயம் வெளுத்தது

மத்தியில் பாரதீய ஜனதா கூட்டணி ஆட்சியமைத்த உடன் உலக வர்த்தகக் கழகத்திலிருந்து விலகுவீர்களா என பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர். 'உலக வர்த்தகக் கழகத்திலிருந்து விலக மாட்டோம். ஆனால் அதனுடன் பேச்சு வார்த்தை நடத்தி, 'சுதேசி' உற்பத்தியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்போம்' என்று அறிவித்தார்கள்.

ஏற்கனவே பா.ஜ.க.வின் 'சுதேசி' வேடம் என்ரான் விவகாரத்தில் அம்பலப்பட்டு சந்தி சிரித்தது. இன்று உலக வர்த்தகக் கழகத்தின் விசயத்திலும் இதேதான் நடந்துள்ளது. எள் என்பதற்கு முன் எண்ணெய்யாக நிற்பதைப் போல, பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளுக்கு இந்தியச் சந்தையை விரியத் திறந்துவிட்டு, காத்து நிற்கிறது பா.ஜ.க. அரசாங்கம்.

கடந்த ஏப்ரல் 16-ம் தேதி உலக வர்த்தகக் கழகம் இந்திய வர்த்தக நிலைமையைப் பற்றிப் பரிசீலிக்க இருந்தது. அதற்கு முன்னதாக ஏப்ரல் 13-ம் தேதியே புதிய ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையை அறிவித்து மண்டியிட்டு நிற்கிறது பா.ஜ.க. அரசு. உலக வர்த்தகக் கழகத்துடனான ஒப்பந்தப்படி அந்நிய பகாசுர நிறுவனங்கள் தமது பொருட்களை எவ்விதத் தடையுமின்றி இந்தியச் சந்தையில் விற்பதற்கு அனுமதி தர வேண்டும்; ஏறக்குறைய 3000-க்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கு அரசின் அனுமதி பெற வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை 10 ஆண்டுகளுக்குள் முற்றாக அகற்ற வேண்டும்; அப்பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வையும் படிப்படியாகக் குறைக்கப்பட வேண்டும்.

இதன்படி கடந்த ஆண்டுதான் ஐக்கிய முன்னணி அரசு 450 பொருட்கள் மீதான இறக்குமதித் தடையை நீக்கியது; சுதந்திரமாக, அரசின் அனுமதியின்றி இறக்குமதி செய்து கொள்ளும் திறந்த பொதுப் பட்டியலில் சேர்த்தது. பா.ஜ.க. ஆட்சியமைத்த ஒரு மாதத்திற்குள் ஏப்ரல் 13-ம் தேதியே மேலும் 340 பொருட்களை இந்த திறந்த பொதுப் பட்டியலில் சேர்த்துள்ளது. ஏப்ரல் இறுதியில் சிறப்பு இறக்குமதிப் பட்டியலில் இருந்த மேலும் 300 பொருட்களை திறந்த பொதுப்பட்டியலில் சேர்த்துள்ளது.

பொதுப் பட்டியலில் முதலில் அறிவித்த 340 பொருட்களில் 298 பொருட்கள் முழுக்கவுமே நுகர் பொருட்களாகும். பா.ஜ.க.வின் 'சுதேசி' வேடத்தை நம்பியிருந்த பலருக்கும் இது பெரிய அதிர்ச்சியை அளித்துள்ளது.

இறால்கள், சோப்பு வகைகள், மரம், உலோகம் அல்லது பிளாஸ்டிக்கால் ஆன பொம்மைகள், கால் பந்துகள், கிரிக்கெட் பந்துகள், வளைதடிகள் (ஹாக்கி மட்டைகள்) என்பவை இவற்றில் சில.

பதப்படுத்தப்பட்ட நண்டு, கடற்சிப்பிகள் என கடற்பொருட்கள்; காளான்கள், வெள்ளரி, பேரிக்காய், செர்ரிப்பழம், ஸ்டராபெரிப் பழம், ஆப்பிள், திராட்சை, டப்பியில் அடைக்கப்பட்ட காய்கறிகள் என விவசாய விளைபொருட்கள்; ஆப்பிள், மாம்பழம் போன்ற பதப்படுத்தப்பட்ட பழச்சாறுகள், மதுபானமில்லாத பழக்கூழ் வகைகள்; பென்சில், கிரேயன்கள்; சேவிங் மிஷின்கள், ரேசர்கள், சேவிங் கிரீம்கள், சோப்பு வகைகள், முடிநீக்கி திரவங்கள்; வார்னிஷ் செயற்கை எனாமல், பிளாஸ்டிக் எமல்சன் பெயிண்டுகள், சீட்டுக் கட்டுகள்; சமையலறை, படுக்கையறைக்கான மரச்சாமான்கள், பிளாஸ்டிக் மேசை, நாற்காலிகள்; கட்டிடம் கட்டுவதற்கான செங்கல், ஓடுகள், சிமெண்ட் கற்கள்; கனிமநீர்வகைகள் (மினரல் வாட்டர்); கதவுகள், ஜன்னல்கள், இமுவை சாத்திகள் (ஷட்டர்கள்), நிலைகள்; விளையாட்டுச் சாமான்கள்; - இப்படிப் பெரும்பாலான நுகர் பொருட்கள் இறக்குமதிக்கு தாராளமாக அனுமதியளிக்கப்பட்டுள்ளன.

கடல், மற்றும் விவசாய விளை பொருட்களுக்கு இறக்குமதித் தீர்வை வெறும் 15 சதவீதம்தான். ஒட்டுமொத்தமாக இந்த நுகர் பொருட்களின் சராசரி இறக்குமதித் தீர்வை 35 சதவீதம் தான். இவற்றுக்கு வேறு வரி ஏதுமில்லை. ஆனால் உள்ளூர் நுகர் பொருட்களுக்கு விற்பனை வரி, ஆக்ட்ராய் என பல வரிகள் கூடுதலாக உண்டு. இறக்குமதிக்கான பொதுப்பட்டியலில் வரும் பொருட்களில் பெரும்பாலானவை இங்கு சிறுதொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுபவை. பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளுடன் போட்டியிட்டு, சந்தையில் பொருட்களை விற்க முடியாமல் நமது உள்ளூர் சிறுதொழில்கள் அழியும் அபாயம் உள்ளது. மேலும் இறக்குமதி வரி பெருமளவு குறைக்கப்பட்டுள்ளதால் அரசின் வருமானமும் குறையும்.

10 ஆண்டுகளுக்குள் வர்த்தகத் தடையை சிறுகச் சிறுக நீக்குவதாக உலக வர்த்தகக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், இந்த தாராளமய வேகம் பாரதீய ஜனதாவின் ஏகாதிபத்திய அடிவருடித்தனத்தையே நிரூபிக்கிறது.

தாராளமயம், தனியார் மயத்தைத் துவக்கி ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்யத் துவங்கிய காங்கிரசு கட்சியே, பா.ஜ.க.வின் இந்த தாராளமய வேகம் கண்டு பயந்து போயுள்ளது. இந்த தாராளமய ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையால் பெரும் பாதிப்புக்குள்ளாகும் கேரளாவில் எதிர்க்கட்சியான காங்கிரசு ஆளும் கட்சி கூட்டணியுடன் இணைந்து இந்த ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையைக் கண்டித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியுள்ளது.

முந்தைய ஐக்கிய முன்னணி ஆட்சியில் நிதியமைச்சர் ப. சிதம்பரம் நாட்டில் வரவு செலவு திட்டமிடும்போது 1997 - '98-ம் ஆண்டுக்கான பற்றாக்குறை மொத்த தேசிய உற்பத்தியில் 4.5 சதம் இருக்கும் என மதிப்பிட்டார். ஆனால் முழுக்க தாராளமயம், தனியார் மயம், உலகமயம் என்கிற சிதம்பரத்தின் திட்டம் முழுத் தோல்வியடைந்தது. பற்றாக்குறை 6.1 சதம் என அதிகரித்தது. அதாவது ரூ. 20,891 கோடி என பற்றாக்குறை உயர்ந்தது. ஏற்றுமதி 18 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்த்தது பொய்த்தது; 3 சதவீதத்தைக் கூட எட்டவில்லை. வரியைக் குறைப்பதன் மூலம் பொருட்கள் பரிவர்த்தனை கூடுதலாகி அதிகமான வருவாய் கிட்டும்






படிப்பகம்

www.padippakam.com

என்பது சிதம்பரம் பின்பற்றிய கொள்கை. இது முழுத் தோல்வியடைந்து, வரி மூலமான வருமானமும் மிகக் குறைந்து திட்டமிட்டதை விட ரூ. 14,236 கோடி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. உற்பத்தி தேக்கமடைந்து தொழிற்துறை பெரும் நெருக்கடியிலுள்ளது. இவை அனைத்திற்கும் காரணம் தாராளமய, தனியார்மய, உலகமய புதிய பொருளாதாரக் கொள்கைகள்தான்.

இந்நிலையில் ஏற்றுமதி - இறக்குமதிக்கான வரியைக் குறைப்பது, நாட்டின் வரவு - செலவில் பற்றாக்குறையை மேலும் அதிகரிக்கும். இப்படி ஏற்படும் பற்றாக்குறையைச் சரிக்கட்ட மக்கள் மீது கூடுதலாக வரி போடுவார்கள். அது திரும்பவும் பொது மக்களைத் தான் பாதிக்கும். தற்போது நாட்டின் வரவு - செலவு திட்டம் தயாரித்து வரும் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா, கூடுதல் வரி விதிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

> பா.ஜ.க. எதைச் செய்ய மாட்டோம் என வாக்கு கொடுக்கிறதோ அதைத் தான் முதலில் செய்யும். தேர்தல் சமயத்தில் சுதேசி என முழங்கி விட்டு, ஆட்சியைப் பிடித்தவுடன் அக்கட்சி அடித்திருக்கும் பல்டி இதன் தொடக்கம் தான்.

ஹெக்டே அறிவித்துள்ள ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையில் சுங்கவரி குறைக்கப்பட்டதோடு, பெரிய தொழில் நிறுவனங்களுக்கு தாராளமாக பல சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வரியே இல்லாமல் மூலதனப் பொருட்கள் இறக்குமதிக்கு கூடுதல் சலுகைகள் தரப்பட்டுள்ளன. இதன் மூலம் ஏற்றுமதி அதிகரிக்கும் என நம்பச் சொல்கிறார்கள். இவற்றால் ஏற்றுமதி அதிகரிக்கும் என்பது கானல் நீரே. மாறாக வரி ஏதும் போடாததால், அரசுக்கு மேலும் வருமான இழப்பு தான் ஏற்படுகிறது.

ஹெக்டேயின் புதிய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை அந்நிய செலாவணிக் கையிருப்பை மேலும் குறைக்கத்தான் வழிவகை செய்துள்ளது. அரசின் வருமானத்தையும் குறைத்துள்ளது. இதில் இன்னொரு கொடுமை என்னவென்றால், இறக்குமதியாகும் பெரும்பாலான நுகர்வுப் பொருட்கள் மேட்டுக் குடியினருக்கானவை. பழக்கூழ், பதப்படுத்தப்பட்ட உணவு என்பவை நடுத்தர மக்களே கூட வாங்க இயலாதவை.

சாதாரணக் குடிமக்களுக்கு வரிச் சுமையைக் கூட்டி மேட்டுக் குடியினரின் களிவெறியாட்டக் கூத்துகளுக்கு சலுகைகளை வாரியிறைத்திருக்கும் பா.ஜ.க.வின் 'சுதேசி'க் கொள்கை யாருக்கானது என அம்பலமாகியுள்ளது.

• மாரி

★ உயிருடன் எரிப்பு ★ பாலியல் வன்முறைகள் ★ சூறையாடல் ★ ரௌடித்தனம்

# மாநிலத்தையே அச்சுறுத்தும் ஆந்திர போலீசின் அக்கிரமங்கள்

**போ**லீசு என்பது சட்டபூர்வ கிரிமினல் கும்பல்; அது சட்டம், நீதி, மனிதப் பண்புகளுக்குக் கட்டுப்படாத மிருகம்; சித்திரவதை செய்தல், கும்பலாக பாலியல் வன்முறையில் ஈடுபடுதல், கொலை - கொள்ளைகளில் இறங்கி கொட்டமடித்தல் என்று தினவெடுத்துத் திரியும் சீருடை அணிந்த ரௌடிக் கூட்டம்; அதன்மீது பெயரளவுக்கு நடவடிக்கை எடுத்தால் கூட அது நாட்டையும் மக்களையும் கடித்துக் குதறத் தயங்காது. — இந்த உண்மைகளை கடந்த ஒரு மாதத்தில் அடுத்தடுத்த வெறியாட்டங்கள் மூலம் ஆந்திர பயங்கரவாத போலீசு மீண்டுமொருமுறை நிரூபித்துக் காட்டியுள்ளது.

ஆந்திராவின் தலைநகர் ஐதராபாத்தின் ரியாசாத் நகரைச் சேர்ந்த ரஷீத்கான் சிறு திருட்டுகளில் ஈடுபட்டு வந்தவர். தனது திருமணத்துக்குப் பிறகு திருடுவதைக் கைவிட்டு சேலைகளில் பூ வேலைப்பாடுகளைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருபவர். வேறொரு வழக்கில் குற்றவாளிகள் சிக்காத போது, தமது பழைய பட்டியலிலுள்ள சிறு குற்றவாளிகள் மீது வழக்கை சோடித்து, குற்றவாளிகள் பிடிபட்டு விட்டதாக கணக்கு காட்டுவதென்பது போலீசாரின் வாடிக்கை. அதன்படியே, ரஷீத்கானைப் பிடித்துவர 3 பேர் கொண்ட போலீசு கும்பல் புறப்பட்டது.

திருமணத்துக்குப் பிறகு தனது குடும்பத்துடன் அச்சிரெட்டி நகரில் தங்கியிருந்த ரஷீத்கான் போலீசு கையில் சிக்காததால், அவரது இளம் மனைவியை வதைத்து இக்கும்பல் பாலியல் வன்முறையை ஏவியது. பின்னர் ஏப்ரல் 10-ந் தேதியன்று அவரது மூத்த சகோதரரும் சமையல் வேலை செய்து வருபவருமான பரீத்கானைப் பிடித்து ஒரு ஆட்டோவில் ஏற்றி விசாரணைக்காக இழுத்துச் சென்றனர். நகரின் ஒதுக்குப்புறமான இடத்திற்கு நள்ளிரவில் வந்த போலீசு குண்டர்கள் ஆட்டோ ஓட்டுநரை ஓய்வெடுத்துக் கொள்ளுமாறும் காலையில் புறப்படலாம் என்று கூறிவிட்டு பரீத்கானை வதைக்கத் தொடங்கினர். பின்னர், ரஷீத்கான் எங்கு சென்றுள்ளான் என்று தனக்குத் தெரியாது என பரீத்கான் அலறிக் கொண்டிருக்கும்போதே, ஆட்டோவிலி

காட்டுமிராண்டி போலீசு குண்டர்களால் உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட பரீத்கான்.




படிப்பகம்

www.padippakam.com

ருந்து பெட்ரோலைப் பிடித்து வந்து அவர் மீது ஊற்றி தீயிட்டுக் கொளுத்தினர். தீயில் வெந்து துடித்த அவரது மரணக் கூச்சலைக் கேட்டு விழித்தெழுந்த ஆட்டோ ஓட்டுனர் அவர் மீது தனது போர்வையைப் போட்டு தீயை அணைக்க முயன்றபோது போலீசார் அவரை அடித்து விரட்டினர். உடலெங்கும் கடுமையான தீக்காயங்களுடன் வெந்து போய் விழுந்த பரீத்கானை ஆட்டோவில் ஏற்றிய போலீசு கொலைகாரர்கள், அவர் தனக்குத்தானே தீயிட்டுக் கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதாக கூறி அவரது வீட்டில் கொண்டுபோய் விடுமாறும் ஆட்டோ ஓட்டுநரை மிரட்டி அனுப்பினர். பீதியடைந்த அவர் குற்றுயிராய் கிடந்த பரீத்கானை தூக்கிக் கொண்டு அவரது வீட்டில் தகவல் கூறிவிட்டு மருத்துவமனையில் சேர்த்தார். தீவிர சிகிச்சை பலனளிக்காமல் அடுத்த இரு நாட்களில் பரீத்கான் பரிதாபமாக மாண்டு போனார். ஆனால் அவர் சாகும் முன்பாக, தன்னை போலீசார் தீயிட்டுக் கொளுத்தி வதைத்ததைப் பற்றி நீதித்துறையினரிடம் வாக்குமூலம் கொடுத்தார். ஆட்டோ ஓட்டுநரும் சாட்சியமளித்துள்ளார்.

அதிர்ச்சியூட்டும் இக்கொடுஞ்செயலை அறிந்து ஆவேசங்கொண்ட முஸ்லிம் மக்கள் பெருந்திரளாகத் திரண்டு ஐதராபாத்தின் ஷாம்ஷீர்கன்ஜ் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டுத் தாக்கித் தொடங்கினர்: நிலைமை விபரீதமாகப் போய்விட்டதைக் கண்டு பீதியடைந்த ஆந்திர அரசு அம்மூன்று கொலைகாரப் போலீசுக்காரன்களைப் பணி நீக்கம் செய்வதாக அறிவித்தும், நீதி விசாரணைக்கு உத்திரவிட்டும் மக்களைச் சாந்தப்படுத்தியுள்ளது.

இக் கொடூரத்துக்கு இரு நாட்களுக்கு முன்பாக மகபூப் நகர் மாவட்டத்தில் மூன்று போலீசு ரௌடிகள் கும்பலாக பாலியல் வன்முறையில் இறங்கிய விவகாரம் வெளிவந்து நாறியது. ஆந்திராவின் மக்கள் யுத்தக் குழுவில் செயல்பட்டு பின்னர் போலீசிடம் சரணடைந்த ஒரு முன்னாள் புரட்சியாளர் மீண்டும் நக்சல்பாரிகளுடன் ரகசிய தொடர்பு வைத்துள்ளதாகக் குற்றம் சாட்டிய போலீசார், அவரது மனைவி ஹுசைனி பீவியைக் கடத்திச் சென்று கும்பலாக பாலியல் வன்முறையை ஏவியுள்ளனர். ஆந்திர சிவில் உரிமைக் கழகம் மூலமாக இக்கொடுஞ்செயல் அம்பலமானதைத் தொடர்ந்து அரண்டுபோன அரசு, வேறு வழியின்றி அம்மூன்று போலீசுக் கயவாளிகளையும் பணிநீக்கம் செய்தது.

இதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அனந்தபூர் மாவட்டத்தில், குடிபோதையிலிருந்த மூன்று போலீசுக்காரன்களும் நான்கு சுங்கத்துறை போலீசு அதிகாரிகளும் வீட்டிலிருந்த ஒரு பெண்ணைத் தூக்கிச் சென்று கும்பலாக பாலியல் வன்முறையை ஏவினர். இக்காட்டுமிராண்டித்தனமான அட்டூழியம் பத்திரிகைகளில் வெளிவந்து அம்பலமானதும், ஆந்திர அரசு இக்குற்றவாளிகளைப் பணிநீக்கம் செய்தது.

இம்மூன்று கொடுஞ்செயல்களிலும் பாதிக்கப்பட்டோர் முஸ்லிம்கள் என்பதால், முஸ்லிம் சமூகத்தினர் போலீசார் மீதும் சந்திரபாபு நாயுடு அரசாங்கத்தின் மீதும் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளனர். அடுத்தடுத்து முஸ்லிம் பெண்கள் போலீசு ரௌடிகளின் கும்பல் பாலியல் வன்முறைக்கு ஆளாவதைக் கண்டு குமுறிக் கொண்டிருந்த நிலையில் பரீத்கான் உயிரோடு எரிக்கப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டதை அறிந்ததும், தன்னெழுச்சியாகத் திரண்டு போலீசு நிலையத்தைத் தாக்கியுள்ளனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேட முயன்ற முஸ்லிம் ஓட்டுக் கட்சித் தலைவர்களை நாயுடு அரசு கைது செய்து ஒடுக்கியது. கொலைகளும் சித்திரவதைகளும் பாலியல் வன்முறையுமே போலீசாரின் அன்றாட நியதியாகிவிட்டது என்று சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கூச்சலிட்டு அடங்கிவிட்டன.

இச்சம்பவங்கள் நடந்து ஏறத்தாழ ஒரு வாரம் முடிந்த பிறகு, கரீம் நகர் மாவட்ட போலீசு கண்காணிப்பாளரான உமேஷ் சந்திரா என்பவரை ஆந்திர அரசு வழக்கமான சுழற்சி முறைப்படி இடமாற்றம் செய்தது.



போலீசு ரௌடித்தனங்களுக்கு எதிராக கரீம் நகர் பேருந்துத் தொழிலாளர்களின் போராட்டம்: கைவிடக் கோரி கெஞ்சும் ஆந்திர முதல்வர் நாயுடு.

இவர் நக்சல்பாரி புரட்சியாளர்களை வேட்டையாடுவதில் "சூரப்புலி" என்று பெயர் பெற்றவர். மேலும் கீழ்நிலை போலீசாரின் அட்டூழியங்களை நக்சல்பாரி எதிர்ப்பு நடவடிக்கையாக நியாயப்படுத்துபவர். அவர்கள் மீது துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால், அதை உடனடியாக நீக்கி விடுபவர். இதனால் நம்ம ஊர் தேவாரத்தைப் போல, உமேஷ் சந்திரா கீழ்நிலை போலீசாரிடம் செல்வாக்கு பெற்றிருந்தார்.

இந்நிலையில் உமேஷ் சந்திராவுக்கு இடமாற்றம் உத்திரவு வந்துள்ளதை அறிந்து போலீசார் ஆத்திரமடைந்தனர். தாங்கள் நேசிக்கும் உயரதிகாரி இடம் மாற்றம் செய்யப்பட்டால் கீழ்நிலை போலீசார் கறுப்பு துணிப்பட்டை அணிந்து தமது எதிர்ப்பைக் காட்டுவது வழக்கம். ஆனால் கரீம்நகர் மாவட்டப் போலீசாரோ வெறிபிடித்த மிருகம் போல் கலரவத்தில் இறங்கினர். ஏற்கனவே அடுத்தடுத்து தமது சகாக்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதைக் கண்டு ஆத்திரமடைந்திருந்த போலீசு ரௌடிகளுக்கு, இம்மாற்றல் உத்திரவு ஒரு சாக்காக அமைந்தது.

ஏப்ரல் 19-ந் தேதியன்று பகலில் பெருங்கும்பலாகத் திரண்டு வாகனங்களில் ஏறிக் கொண்டு வீதிகளில் வலம் வந்த போலீசார், கடைகளையும் வர்த்தக நிறுவனங்களையும் அடித்து நொறுக்கி கட்டாயக் கடையடைப்பை நடத்தினர். அரசுப் பேருந்துகளை அடித்து நொறுக்கி போக்குவரத்தைத் துண்டித்தனர். தெருவில் போவோர் வருவோரை - பெண்கள், குழந்தைகள் என்றும் பாராமல் துப்பாக்கிக் கட்டையாலும் தடிகளாலும் தாக்கினர். கரீம் நகரின் ஹுசுராபாத்தில் தொடங்கிய இந்த வெறியாட்டம், அடுத்த சில மணி நேரத்தில் மாவட்டம் முழுவதும் பற்றிப் பரவியது. பேருந்துகளை அடித்து நொறுக்கிய போலீசு ரௌடிகள் பின்னர் பேருந்து பணிமனைகளில் புகுந்து வெறியாட்டம் போட்டனர். தெருவில் சென்ற வாகனங்களை வழிமறித்து நாசப்படுத்தினர். பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திரையரங்குகள், திருமண மண்டபங்கள், தெலுங்கு தேசக் கட்சி அலுவலகம், எம்.எல்.ஏ.க்கள் - பிரமுகர்களின் வீடுகள், பத்திரிகை அலுவலகம், குடியிருப்புகள் என் ஒன்றுவிடாமல் எல்லா இடங்களிலும் புகுந்து போலீசு குண்டர்கள் நாள் முழுக்க வெறியாட்டம் போட்டனர். இக்கொடூரத் தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்தனர். பல லட்சக் கணக்கான சொத்துக்கள் நாசமடைந்தன.

இத்தனை அட்டூழியங்கள் நடந்து கொண்டிருந்தபோது, போலீசு கண்காணிப்பாளர் உமேஷ் சந்திரா கரீம் நகரில்தான் இருந்தார். ஆனாலும் அவர் போலீசாரின் ரௌடித்தனங்களைக் கண்டிக்கவோ, கட்டுப்படுத்தவோ முன்வரவில்லை. மாறாக, திரைமறைவிலிருந்து இவற்றை உசுப்பிவிட்டுக் கொண்டிருந்தார். இந்த வெறியாட்டங்கள் ஏதோ கீழ்நிலை போலீசார் உணர்ச்சிவசப்பட்டதால் நிகழ்ந்து விட்ட விபரீதம் அல்ல; உயர்கல்வி கற்று உயர் பொறுப்பிலிருக்கும் போலீசு அதிகாரிகள், மாநிலத்தையே தமது காலடியில் பணியவைக்க திட்டமிட்டு நடத்தியதே இப்பயங்கரவாத வெறியாட்டம் என்பதை இது நிரூபித்துக் காட்டுகிறது.

போலீசு குண்டர்களின் வெறியாட்டத்தைக் கண்டித்து மறுநாள் பேருந்துத் தொழிலாளர்கள் தலைமையில் கரீம் நகர மக்கள் தன்னெழுச்சியாக கடையடைப்பு - மறியல் போராட்டத்தை மேற்கொண்டனர். மாநிலத்தையே மிரட்டிப் பணியவைக்கக் கிளம்பிய போலீசு ரௌடிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்த ஆந்திர முதல்வர், கரீம் நகருக்குப் பறந்து வந்து மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்டுக் கெஞ்சினார். போலீசு குண்டர் படைத் தலைவன் உமேஷ் சந்திராவை தற்காலிகப் பணிநீக்கம் செய்து நீதித்துறை விசாரணைக்கு உத்திரவிட்டு, உரிய நிவாரணமளிப்பதாக அவர் வாக்குறுதி அளித்த பிறகே கரீம் நகரில் இயல்பு நிலை திரும்பியது.

கடந்த ஓராண்டில் போலீசு கயவாளிகள் இப்படி ரௌடித்தனம் செய்வது மூன்றாவது முறையாகும். சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டவும் மக்களைக் காக்கவும் உருவாக்கப்பட்டதே போலீசுத் துறை என்ற மாயையை போலீசு ரௌடிகளே தகர்த்தெறிந்து, மக்களைக் கடித்துக் குதறத் தொடங்கிவிட்ட பிறகு இனி போலீசு மிருகங்களிடமிருந்து தம்மை தற்காத்துக் கொள்ள உழைக்கும் மக்கள் ஆயுதமேந்திப் போராடுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

• குமார்



படிப்பகம்

www.padippakam.com



# தொழிலாளர் தின இயக்கச் செய்திகள்

தாராளமயம் என்ற பெயரில் நாடு மறுகாலனியாக்கப்படுவதையும், பாசிச சக்திகளான ஜெயா - பா.ஜ.க. கூட்டணியையும் முறியடிப்பதுதான் தொழிலாளி வர்க்கத்தின் உடனடிக் கடமையாகும். இதை வலியுறுத்தி மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, தொழிலாளர் பிரச்சாரக் குழு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி - இப்புரட்சிகர அமைப்புகள் ஒன்றிணைந்து, தொழிலாளர் தினத்தை அரசியல் ஆர்ப்பாட்ட நாளாக தமிழகமெங்கும் நடத்தின.

• கம்பம் பகுதியில், விவசாயிகள் விடுதலை முன்னணி தொழிலாளர் தினத்தன்று மிதிவண்டிப் பேரணி நடத்தியது. கம்பம் நகரில் இப்பேரணியை நடத்த போலீசு அனுமதி தர மறுத்துவிட்டதால், வி.வி.மு. பேரணியை தேவாரத்தில் நடத்தியது. 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட இப்பேரணிக்கு, தோழர் பாக்கியராஜ் தலைமை தாங்கினார். பேரணி கோம்பையில் முடிந்த பின் தோழர் சேகர் சிறப்புரையாற்றினார்.

• கோவையில் தொழிலாளர் பிரச்சாரக் குழுவும், மக்கள் கலை இலக்கியக் கழகமும் இணைந்து மே தினத்தன்று ஊர்வலம் நடத்தின. மழை பெய்த போதும், ஒதுங்கி விடாது, மழையில் நனைந்து கொண்டே தோழர்கள் தங்கள் குழந்தைகளோடு அரசியல் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு சென்றதைப் பார்த்த நகர மக்கள், தோழர்களிடம் மிகுந்த பரிவு காட்டினார். ஊர்வலத்தின் முடிவில் கோவை மாவட்ட ம.க.இ.க. செயலர் மணிவண்ணன் சிறப்புரையாற்றினார்; தோழர் காளி தலைமையில் கலைக் குழுவினர் புரட்சிகர கலை நிகழ்ச்சிகளை நடத்தினர். இப்பேரணியில் ஈரோட்டைச் சேர்ந்த புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணித் தோழர்களும் கலந்து கொண்டனர்.

• திருச்சியில் மக்கள் கலை இலக்கியக் கழகம், புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, "பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன்", விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து பேரணியும், ஆர்ப்பாட்டமும் நடத்தின. பேரணி திருச்சி புத்தூர் நாலு ரோட்டில் தொடங்கி, தெப்பக்குளம் அஞ்சல் நிலையம் முன்பு ஆர்ப்பாட்டத்துடன் முடிந்தது. பேரணியை "பாய்லர் பிளாண்ட் ஒர்க்கர்ஸ் யூனியன்" பொதுச் செயலாளர் தோழர் நாராயணசாமி துவக்கி வைத்து உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த தோழர் வில்லியமும், இப்புரட்சிகர அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் தோழர் சேகரும் உரையாற்றினார்கள்.

மேலும், மே தினத்தன்று காந்திபுரம் பகுதியில் ம.க.இ.க. சார்பிலும், துவாக்குடி, தாராநல்லூர், செந்தண்ணீர்புரம் பகுதிகளில் பு.மா.இ.மு. சார்பிலும் கொடியேற்றப்பட்டு, புரட்சிகர பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

• சென்னையில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (பு.ஜ.தொ.மு.) சார்பாக மே தினப் பேரணியும், பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. பேரணி அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தில் தொடங்கி, பாடி - பிரிட்டானியா நிறுவனத்தின் எதிரில் முடிவடைந்தது. இப்பேரணிக்கு பு.ஜ.தொ.மு. - சென்னை பகுதி தலைவர் தோழர் முகுந்தன் தலைமை தாங்கினார். பின்னர் நடந்த பொதுக்கூட்டத்திற்கு பு.ஜ.தொ.மு. சென்னை பகுதிச் செயலர் தோழர் தங்கராசு தலைமையேற்க, ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் தோழர் சீனிவாசன் சிறப்புரையாற்றினார். பொதுக் கூட்டத்தின் இறுதியில் சென்னை ம.க.இ.க. கலைக் குழுவினரின் புரட்சிகர கலை நிகழ்ச்சி நடைபெற்றது.



*• ஏப்ரல் ' 98 பு.ஜ. இதழ் படித்தேன். 'இந்துத்துவ அரசியலிடம் கருணாநிதியின் சரணாகதி' தலைப்பிட்ட கட்டுரை திராவிட அரசியலின் அவலட்சணத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. அட்டைப் படம் ஒரு கட்டுரை சொல்ல வேண்டிய கருத்தை ஒரு படத்தின் வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. நாற்காலி சண்டை, கூட்டணி கழுத்தறுப்பு ஆகியவற்றுடன் பதவியைப் பிடித்துள்ள வாஜ்பாய் அமைச்சும் இந்து ராஜ்யம் எந்த லட்சணத்தில் இருக்கும் என்பதை அட்டைப்படம் உணர்த்தியது. போலிக் கம்யூனிஸ்ட் நம்பூதிரிபாடின் மறைவிற்கு அத்வானி அஞ்சலி செலுத்தும் படம் 'ஆளும் வர்க்கங்கள் அழட்டும்' என்ற கட்டுரையின் தலைப்பிற்கு ஏற்றாற்போல, போலி கம்யூனிஸ்டுகளின் முகத்திரையைக் கிழிப்பது போல் இருந்தது.*

*சிறுநீரகத்தை விற்றால்தான் நாளை உணவு என்னும் அளவிற்கு தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை சீரழிக்கப்பட்டு வருவதைப் படித்தவுடன் இன்றைய இந்த சமுதாயத்தை மாற்றி அமைத்தே தீர வேண்டும் என்னும் உணர்வை ஏற்படுத்தியது. தினமலரை அம்பலப்படுத்தி எழுதியதைப் போலவே மக்களிடம் பொய்புரட்டுகளை எழுதி ஆதாயமடைந்து வரும் பத்திரிகைகளையும் அம்பலப்படுத்தி எழுதுங்கள்.*

*பாசிசம் என்ற வார்த்தைக்கான பொருள் பலருக்கும் புரியவில்லை என்கிறார்கள். இன்றைய இளந்தலைமுறையினர், புதிய தொடர்புகள் அறிந்து கொள்ளும் வண்ணம் பாசிசம் என்பதை விளக்கி எழுதுங்கள். கருத்துப் படங்களை எதிர்பார்க்கிறேன். வாசகர் கடிதம் பகுதி வைத்திருப்பது இங்கே வரவேற்பைப் பெற்றுள்ளது.*

இரா. சுரேஷ், திருச்சி.

*• 1 - 15 ஏப்ரல் ' 98 புதிய ஜனநாயகம் இதழின் அட்டைப்பட ஓவியம் விமர்சனத்திற்குரியதாகக் கருதுகிறேன். பாரதீய ஜனதாவே பாசிசத்தின் ஒட்டு மொத்த முழு உருவம்தானே! இதில் இந்த கூட்டணி கழுத்தறுப்பு, நாற்காலி சண்டை, கழிசடை அரசியல் என்ற இவை அனைத்தும் இவர்களுக்கு ஒன்றும் பெரிய சுமையாக இருக்காது என்று கருதுகிறேன். "இதையும் தூக்கி கொண்டுதான் போக வேண்டுமா?" என்று போட்டிருப்பது, இவர்களுக்கு இதில் ஒன்றுமே சம்மந்தம் இல்லாதது போல் சித்தரிக்கிறது.*

ந. முருகன், பு.ஜ. வாசகர், திருச்சி.

*• 16 - 31 மார்ச் ' 98 புதிய ஜனநாயகம் இதழில் தேனி மாவட்டம் சுருளிப்பட்டி கிராமத்தில் தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது ஏவிவிடப்பட்ட பாலியல் வன்முறை பற்றி எழுதியிருந்தீர்கள். அதில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் உண்மைதான் என்றாலும், தலைப்பு பொருத்தமில்லாமல் இருந்தது. தவறு செய்தவர்கள் பிரன்மலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால், இத்தகைய கொடூரச் செயல்களை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை; ஆயினும் எதிர்க்கவுமில்லை. குறிப்பாக, பிரன்மலைக் கள்ளர் சாதியைச் சேர்ந்த பலரும் இந்த இழிசெயலை வாயளவில் கண்டித்தனர். அப்படியிருக்க, ஒட்டு மொத்த கள்ளர் சமூகமே சேர்ந்து செய்ததைப் போல ஒரு தோற்றத்தை ஏற்படுத்துவதாகவே உங்கள் தலைப்பு உணர்த்துகிறது.*

*தவறு செய்தவர்களை யாரும் ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை என்ற ஒதுங்கும் போக்கைச்சுட்டிக்காட்டி, பகிரங்கமாக எதிர்க்க முன் வர வேண்டும் என்றும், இவர்களைப் போன்ற காமுகர்களைச் சாதி சங்கங்கள், சாதி அமைப்புகள் பாதுகாத்து வருகின்றன, அவர்களைத் தனிமைப்படுத்த வேண்டும் எனும் கோணத்திலும் எழுதியிருந்தால் மிகவும் சரியாக இருந்திருக்கும்.*

பு.ஜ. வாசகர் வட்டம்,
நாராயணத் தேவன்பட்டி.



படிப்பகம்

• நாராயணத்தேவன்பட்டி வாசகர்வட்டத் தோழர்கள் தங்கள் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ள விமர்சனத்தை ஏற்றுக் கொள்கிறோம். வருங்காலங்களில் இது போன்று தவறுகள் ஏற்படா வண்ணம் கவனமுடன் செயல்படுவோம் என உறுதி கூறுகிறோம். மேலும், அச்செய்தியை எந்தக் கோணத்தில் வெளியிட்டிருக்க வேண்டும் என அத்தோழர்கள் சுட்டிக் காட்டியுள்ள ஆலோசனை சரியான கண்ணோட்டமுடையது எனக் கருதி ஏற்றுக் கொள்கிறோம். தோழர்களின் ஆக்கப்பூர்வமான ஆலோசனைக்கு நன்றி!

ஆசிரியர் குழு

• 1 - 15 ஏப்ரல் ' 98 இதழில், ''தமிழ்நாடு போலீசுக்கு பார்ப்பனர் வக்காலத்து'' என்ற கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. புதிய பார்வையில் நல்ல முறையில் பார்ப்பனியத் தன்மையை விளக்கியுள்ளது. பு.ஜ. இதழ் வாசகரான பேராசிரியர் ஒருவர், எந்த கட்டுரையாசிரியரும் பார்க்காத பார்வை இக்கட்டுரையில் இருந்ததாகப் பாராட்டினார். ''பார்ப்பன தினமலரின் வெடிகுண்டு அரசியல் கட்டுரையும் சிறப்பாக இருந்தது.''

ஏ.எஸ். முத்து, விக்கிரமசிங்கபுரம்.

• 1 - 15 ஏப்ரல் '98 இதழில் பொதுவாக கட்டுரைகள் சிறப்பாக உள்ளன. முன் பக்க அட்டைப்படக் கருத்து பெரும்பாலானவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. கட்டுரை தலைப்புகள் ஜனரஞ்சகமாக இருந்தால், சாதாரண மக்களையும் தலைப்பைப் பார்த்தவுடனே படிக்கத் தூண்டும். பு.ஜ. கட்டுரையில்தான் சுத்தமான தமிழைக் காண முடிகிறது என்று வாசகர்கள் குறிப்பிட்டு எழுதுவது மிகவும் பொருத்தமானது தான். ஆனால், கலாட்டா, லடாய் போன்ற சொற்களைத் தவிர்த்தல் நல்லது. எழுத்துப் பிழை தவிர்க்கப்பட வேண்டும்; கேள்வி - பதில் பகுதி தொடர்ந்து வர வேண்டும்.

பு.ஜ. வாசகர் வட்டம், சென்னை.

# தோழர் போல்பாட்டின் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்!

கம்போடியாவின் கேமர்ரூஜ் புரட்சிகர இயக்கத்தின் தலைவராகவும், 1975 முதல் 1979 வரை கம்போடிய மக்கள் ஜனநாயகக் குடியரசின் அதிபராகவும் இருந்த கம்யூனிசப் புரட்சியாளர் தோழர் போல்பாட் கடந்த ஏப்ரல் 15-ந் தேதி தனது 73-ஆவது வயதில் மரணமடைந்து விட்டார். அவர் உயிருடன் இருக்கும்போதே இறந்து விட்டதாக வதந்திகள் பரவியபோது குதூகலித்துக் கொண்டாடிய ஏகாதிபத்தியவாதிகள், இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கொடுங்கோலன் என்று அவர் மீது அவதூறுகளை வாரியிறைத்தனர். அவரைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தில் விசாரித்துத் தண்டிக்க வேண்டுமெனக் கொக்கரித்தனர். இப்போது அவரது மறைவைத் தொடர்ந்து அவரை வெறிபிடித்த கொடுங்கோலனாக, மனிதாபிமானமற்ற கொடிய சர்வாதிகாரியாக, கொலைகாரனாக ஏகாதிபத்திய நாடுகளின் பத்திரிகைகளிலிருந்து நம்மூர் தினமணி, தினத்தந்தி வரை சகட்டுமேனிக்கு இழிவு படுத்தி அவதூறு செய்கின்றன.

''குடும்ப உறுப்பினர்களைப் பிரித்து தனித்தனி கம்யூன்களுக்கு அனுப்பினான்; நாட்டின் அனைத்து மக்களும் உழைப்பாளர் கம்யூன்களில் பயிற்சி பெற வேண்டும் என்று உத்திரவிட்டான்; நகரவாசிகள் கிராமங்களுக்குச் சென்று கடுமையாக உழைக்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கினான். இதற்குப் பணியாதவர்களைச் சுட்டுக் கொன்றான்'' என்று நடுப்பக்கக் கட்டுரை எழுதும் ''தினமணி'', ''காதலைத் தடைசெய்து நகரவாசிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் கட்டாயத் திருமணங்களை நடத்தினான்'' என்று கீழ்த்தரமான முறையில் போல்பாட் மீது அவதூறு சேற்றை வாரியிறைக்கிறது.

1975-இல் கேமர் ரூஜ் படைகள் நாட்டை விடுதலை செய்தபோது, கிராமப்புறங்களையும் விவசாயத்தையும் புறக்கணிக்கும் ஏகாதிபத்தியக் கொள்கையின் விளைவாக நகரங்களில் குடியேறியிருந்த மக்கள் தொகை, மொத்த மக்கட்தொகையில் பாதியளவுக்கு மேலாக இருந்தது. சுயசார்புடன் நின்று வறுமையைப் போக்கி உற்பத்தியைப் பெருக்க வேண்டுமானால், அளவுக்கு அதிகமாக மிதமிஞ்சி குடியேறிவிட்ட நகர்ப்புற மக்களை கிராமப்புறங்களுக்கு அனுப்புவதைத் தவிர வேறு வழியில்லை. ஆனால் நகர்ப்புறத்தில் ஏகாதிபத்திய சீரழிவுக் கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடந்த எதிர்ப்புரட்சியாளர்களும் பொறுக்கிகளும் கிராமப்புறங்களுக்குச் சென்று உழைக்க மறுத்த



தோழர் போல்பாட்

போது, போல்பாட் அரசு அதைக் கட்டாயமாக்கியது. இந்த உண்மைகளை வசதியாக இருட்டடிப்பு செய்துவிட்டு ஏகாதிபத்திய தாசர்கள் அண்டப்புளுகை அவிழ்த்து விட்டு அவதூறு செய்கின்றனர். அன்று சோவியத் ஒன்றியத்துடன் பனிப்போரில் ஈடுபட்டிருந்த அமெரிக்க வல்லரசு போல்பாட்டின் புரட்சி அரசை அங்கீகரித்ததையும், வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களது பொம்மையாட்சியை எதிர்த்ததையும் வசதியாக இப்போது மறைத்து விட்டனர்.

ஏகாதிபத்தியவாதிகளின் கூற்றுப்படி, போல்பாட்டின் கொள்கைகள் சர்வாதிகாரமாகவே இருந்துவிட்டுப் போகட்டும். உள்நாட்டுப் போரின்போது நகரங்களில் பெருமளவில் மக்கள் குடியேறிவிட்ட நிலையில், விவசாய உற்பத்தியை சுயசார்புடன் பெருக்கவும் நகர்ப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் ஏகாதிபத்தியவாதிகள் வைக்கும் மாற்றுத் திட்டம்தான் என்ன? பத்திரிகைகளில் போல்பாட்டை சர்வாதிகாரியாக சித்தரித்து கட்டுரை எழுதும் எந்தவொரு படித்த முட்டாளும் ஆக்கபூர்வமான மாற்றுக் கொள்கையை இதுவரை முன் வைக்கவில்லை. ஜனநாயகத்தை நிலைநாட்டப் போவதாகக் கூறிக் கொண்டு கம்போடியாவில் தலையிட்ட ஏகாதிபத்திய வல்லரசுகளின் பொருளாதாரக் கொள்கைகள் தோற்றுப்போய், அந்நாடு வல்லரசுகளின் வேட்டைக் காடாக மாறிப் போனதைத் தவிர வேறெதையும் சாதிக்கவுமில்லை. இந்த லட்சணத்தில் போல்பாட் மீது அவதூறு செய்ய இவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது?

தோழர் போல்பாட்டை என்னதான் இழிவுபடுத்தினாலும் அவரது வீர நினைவுகளை கம்போடிய மக்களிடமிருந்தும் காலனி நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாற்றிலிருந்தும் ஒருக்காலும் மறைத்து விட முடியாது. தோழர் போல்பாட் ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்திலிருந்து ஆயுதப் போராட்டப் பாதையில் கம்போடியாவை விடுதலை செய்த நாட்டுப்பற்று மிக்க போராளி! அன்றைய சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயாகச் செயல்பட்ட வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களையும், அதன்பிறகு அமெரிக்க தலையீட்டால் திணிக்கப்பட்ட மோசடித் தேர்தலையும், துரோகிகளின் ஏகாதிபத்திய விசுவாச ஆட்சியையும் எதிர்த்து இறுதிவரை உறுதியாகப் போராடிய புரட்சியாளர்! எல்லாவற்றுக்கும் மேலாக, எந்தவொரு ஏகாதிபத்தியத்தையும் சார்ந்திராமல், தோழர் மாவோ வழிகாட்டலின்படி சுயசார்புடன் நின்று நாட்டை முன்னேற்றத் துடித்த முன்னுதாரணமிக்க கம்யூனிஸ்டு! தோழர் போல்பாட்டின் நினைவை நெஞ்சிலே ஏந்துவோம்! தோழர் போல்பாட்டுக்கு எமது வீரவணக்கம்!

www.padippakam.com

# சிவந்த கண்கள்  கவனிக்கட்டும்

## சம்பளம் கேட்டதற்கு கிடைத்த தண்டனை

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள தானே நகரைச் சேர்ந்த சிறுவன் சந்தீப் வாக்மோர், குழந்தை தொழிலாளி. தனக்கு வரவேண்டிய சம்பள பாக்கியைக் கேட்டதற்காக, இன்று தனது வலது கையை இழந்து நிற்கிறான் அச்சிறுவன். ஆறுமாத காலமாக சம்பளமே தராமல் தன்னைக் கசக்கிப் பிழிந்த முதலாளியிடம் தைரியமாக சம்பளத்தைக் கேட்ட சந்தீப்பை, நையப்புடைத்த அம்முதலாளி, ஓடிக் கொண்டிருந்த ஜெனரேட்டர் மீது அச்சிறுவனைத் தூக்கி வீசியெறிந்தான். இதனால் சந்தீப்பின் வலது கை முற்றிலும் எரிந்து சிதைந்து போனது. இப்பொழுது அம்முதலாளி மீது வழக்கு போடப்பட்டுள்ளது. குற்றவாளி அம்முதலாளி மட்டும் தானா? அரசிற்கு சந்தீப்பின் வாழ்க்கையைச் சிதைத்ததில் பங்கில்லையா?

## ஓட்டு உரிமையும் தாழ்த்தப்பட்டோரும்

பாட்னா பாராளுமன்றத் தொகுதியில் உள்ள பஸ்வான் டோலி என்ற கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர், பாராளுமன்றத் தேர்தலில் லல்லு பிரசாத்தின் ராஷ்ட்ரீய ஜனதா தளத்திற்கு ஓட்டுப் போடவில்லை. மாறாக, அவர்களில் பெரும்பாலோர் இந்தத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு வாக்களித்தனர். தங்களின் அச்சுறுத்தலையும் மீறி பா.ஜ.க.விற்கு ஓட்டுப் போட்ட அத்தாழ்த்தப்பட்டோருக்குப் பாடம் புகட்ட, யாதவ் சாதியைச் சேர்ந்த சில ஆதிக்க சக்திகள், நூற்றுக்கணக்கான ராஷ்ட்ரீய ஜனதாதளக் குண்டர்களைத் திரட்டிக் கொண்டு அக்கிராமத்தினுள் நுழைந்து, கண்ணில்பட்டவர்களையும் தாக்கி தங்களின் சாதிவெறியைக் காட்டிக் கொண்டனர். இத்தாக்குதலைக் கண்டித்து தாழ்த்தப்பட்டோர் அருகிலுள்ள போலீசு நிலையத்தைச் சுற்றி வளைத்து, முற்றுகைப் போராட்டம் நடத்திய பின்னும் கூட, போலீசு எந்தவொரு யாதவ் சாதிவெறியனையும் கைது செய்யவில்லை. இந்திய ஜனநாயகத்தின் போக்கியதை இதுதான்!




## தாய்லாந்து பெண்கள் பாலியல் ஏலப்பொருளா?

தாய்லாந்து நாட்டில் விபச்சாரத்தை நடத்தி வரும் தரகு கும்பல், தகவல் வலைப் பின்னல் மூலம் ஐரோப்பிய நாடுகளில், "3,000 அமெரிக்க டாலருக்கு ஒரு கன்னி கழிந்த தாய் பெண்ணையும், 4,000 அமெரிக்க டாலருக்கு ஒரு கன்னி கழியாத தாய் பெண்ணையும் உலகத்தின் எந்த மூலைக்கும் கூட்டிச் சென்று அனுபவிக்கலாம்; கூடுதலாக 4,000 டாலர் கொடுத்தால் அவள் எப்பொழுதும் உங்கள் பாலியல் அடிமை" என விளம்பரம் செய்து வருகின்றன. இதை இந்நாட்டு பத்திரிகைகள் அம்பலப்படுத்திவிட, தங்கள் நாட்டு மானம் போய்விட்டதாக ஓட்டுக்கட்சிகள் ஒப்பாரி வைத்தன. ரொம்ப சரி! உள்நாட்டில் தாய்லாந்து பெண்கள் வெள்ளை பன்றிகளுக்கு பகிரங்கமாக விற்கப்படுகிறார்களே, அதற்கு ஏன் இவர்கள் வெட்கப்படுவதில்லை?

## ஆட்சியாளர்கள்: காரியக்கார மூடர்கள்

கர்நாடகா மாநிலத்தில் கொல்லர்தொத்தி என்ற கிராமத்தில் வசிக்கும் கொல்லர் (Gollar) என்ற பழங்குடியினர், கர்ப்பமாய் இருக்கும் தங்கள் இனப் பெண்களை, தங்கள் வீடுகளில் குழந்தை பெற்றுக் கொள்ள அனுமதிப்பதில்லை. மாறாக, மகப்பேறு சமயத்தில், அப்பெண்களிடம் ஒரு கத்தியைக் கொடுத்து, அக்கிராமத்தின் எல்லையைத் தாண்டி இருக்கும் குடிசைக்கு வலுக்கட்டாயமாக அனுப்பி விடுகின்றனர். அங்கு தான் அப்பெண் தன்னந்தனியாக, உதவிக்கு யாருமின்றி பிள்ளை பெற்றுக் கொள்ள வேண்டும். கிராமத்தினுள் குழந்தை பெற்றுக் கொள்வது கெட்ட சகுனம் என்ற அம்மக்களின் மூடநம்பிக்கைதான் இவ்விஷப் பரீட்சைக்குக் காரணம். ஆட்சியாளர்களோ இம்மூடநம்பிக்கையைக் களைந்தெடுப்பதற்கு மாறாக, பெண்கள் கிராமத்திற்கு வெளியே குழந்தை பெற்றுக் கொள்ள கட்டிடமொன்றைக் கட்டிக் கொடுத்துள்ளனர்.


## அமெரிக்காவில் பட்டினிப் பட்டாளம்

உலகத்தின் மிகப் பெரிய செல்வந்த நாடு என்ற அமெரிக்காவின் ஜோடனை மெல்ல மெல்லக் கலைந்து வருகிறது. வேலையிழப்பும், வறியவர் - செல்வந்தர் இடையேயான ஏற்றத்தாழ்வும் அந்நாட்டில் அதிகரித்து வரும் வேளையில், கிட்டத்தட்ட 40 இலட்சம் குழந்தைகளையும் உள்ளிட்டு, 1 கோடி அமெரிக்கர்கள் அடுத்தவேளை உணவுக்கு வழியின்றி பட்டினி கிடப்பதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. பெரும்பாலும் ஒரே ஒரு நபர் வேலைக்குச் செல்லும் குடும்பங்கள்தான் பட்டினியின் கோரப்பிடியில் சிக்கிக் கொண்டுள்ளன. மேலும், வறுமைக் கோட்டிற்கு மேல் சம்பாதித்தாலும், நான்கு பேரைக் கொண்டுள்ள குடும்பங்களைக் கூட பட்டினி அரக்கன் பயமுறுத்தத் தொடங்கிவிட்டானாம்!

## நொண்டிக் குதிரைக்கு...

மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த நாம்தேவ் கெயிக்வாட் என்ற சமூக நல ஊழியரைக் கைது செய்த போலீசார், அவர் ஒரு தேசவிரோதி எனக் குற்றஞ் சுமத்தியுள்ளனர். அவரிடமிருந்து "அரசியல் சாசன சட்டத்தை எரி" என்ற நூலைக் கைப்பற்றியிருப்பதை இதற்கு ஆதாரமாகக் கூறியுள்ளனர். உண்மையில் இந்த நூல் சாதிப் பிரச்சினைகள் குறித்த பகத்சிங் எழுத்துக்களின் மராத்தி மொழி பதிப்புதான். அதில், "இன்னும் ஐந்து வருடங்களுக்குள் சமூக - பொருளாதார நீதி கிடைக்காவிடில் அரசியல் சாசனத்தை எரிப்போம்" என்ற அம்பேத்கரின் அறை கூவல் மேற்கோளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைத்தான் தேசத்துரோகம் என ஊதிப் பெருக்கியுள்ளது மகாராஷ்டிரா போலீசு.

**புற்று நோய் கண்ட சிறுவன் ஜோஹ்ரா நாசர்**



## வளைகுடாப் போரின் கொடூர விளைவுகள்

ஈராக்கில் ஒவ்வொரு நாளும் 10 முதல் 15 குழந்தைகள் லூகீமியா என்ற இரத்தப்புற்று நோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகின்றனர். அந்நாட்டில் குழந்தைகள் புற்று நோயினால் பாதிக்கப்படுவது வளைகுடாப் போருக்குப் பின் ஐந்து மடங்கு அதிகரித்துள்ளது. அப்போரின் பொழுது அமெரிக்கா ஈராக் மீது செறிவு குறைந்த யுரேனியம் குண்டுகளை வீசியதினால் ஏற்பட்டுள்ள அணுக்கதிர் வீச்சினால்தான் குழந்தைகள் புற்று நோயால் பாதிக்கப்படுவது அதிகரித்து வருவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

Published and Owned by R. SHANMUGARAJ, 25 Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Road, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ

# இதுதான் இன்றைய இந்தியா



நிர்மலா நிகம் என்ற இந்த தாழ்த்தப்பட்ட தாயும், அவரது மூன்று மகள்களும், தங்களது கிராமத்தைச் சேர்ந்த யாதவ் தம்தாரே என்ற சமூக விரோதியைத் தண்டிக்கக் கோரி, கிட்டதட்ட 600 நாட்களாக, மும்பை நகரில் மகாராட்டிரா மாநிலத் தலைமைச் செயலகத்தின் முன்னேயுள்ள நடைபாதையில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

மகாராட்டிரா மாநிலத்தின் சக்ரி மாவட்டத்திலுள்ள பீம்நகர் என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்த நிர்மலா நிகம், தனது வீட்டின் முன்னே கள்ளச் சாராய - விபச்சார விடுதிகளை நடத்தி வந்த யாதவ் தம்தாரேயுடன் பல முறை மோதினார். அவனைத் தண்டிக்கக் கோரி போலீசாரிடம் மனுக்களைக் கொடுத்துக் கொண்டே இருந்தார். அவரின் விடாப்பிடியான போராட்டத்தினால், கள்ளச் சாராய - விபச்சார விடுதிகளை இழுத்து மூடியது போலீசு.

அச்சமூக விரோதியோ தனது ரவுடிப் பட்டாளத்தை ஏவிவிட்டு, நிர்மலா நிகமின் வீட்டை இடித்துத் தரைமட்டமாக்கினான்; பிழைப்புக்காக அவர் நடத்தி வந்த சிறிய மளிகைக் கடையைத் தாக்கி சேதப் படுத்தினான். தனது உயிரைக் காத்துக் கொள்ள அக்கிராமத்தை விட்டு வெளியேறிய இத்தாழ்த்தப்பட்ட தாய், மும்பைக்கு வந்து, நீதி கேட்டு தனது உண்ணாவிதரப் போராட்டத்தைத் தொடங்கினார். இப்போராட்டத்தினூடேயே தனது மகள்களைப் படிக்க வைக்கவும் தவறவில்லை, அவர்.

பா.ஜ.க.வைச் சேர்ந்த அம்மாநில துணை முதல்வர் கோபிநாத் முண்டே, ஒரு பொதுப் பிரச்சினைக்காகப் போராடி வரும் இத்தாயின் முகத்தைக் கூடப் பார்க்க விரும்பாமல், அவரை தனது அறையில் இருந்து வெளியே துரத்தியடித்தார். மும்பை போலீசு இவரை "பொது மக்களுக்கு இடையூறாக இருக்கிறார்" எனக் குற்றஞ்சுமத்தி சிறையில் அடைக்க முயன்றது; இவரது மகள்களைப் பாலியல் பலாத்காரப்படுத்த முயன்ற குண்டர்களின் மீது வழக்குப் போடாமல வெளியே அனுப்பிவிட்டு, அச்சுறுத்த முயன்றது. மறுபுறம், "மகளுக்கு வேலை தருகிறோம்; போராட்டத்தை விட்டு விடு" என ஆசை காட்டியது.

மும்பை நகரவாசிகள் பலர் இவரின் போராட்ட நியாயத்தையும், மன உறுதியையும் புரிந்து கொண்டு தார்மீக ஆதரவளித்து வருகின்றனர். இவர் போராட்டத்தை தொடர்வதற்கு வசதியாக நடைபாதையிலேயே பிளாஸ்டிக் ஷீட்டால் கொட்டகை போட்டுக் கொடுத்தும், இவரின் மூத்த மகளின் படிப்புச் செலவை ஏற்றுக் கொண்டும் உதவி புரிந்து வருகின்றனர். பொது மக்கள் தரும் இந்த ஆதரவினால் தான், ஆட்சியாளர்கள் இவரின் மீது கை வைக்க அஞ்சுகின்றனர்.

சமூக விரோதிகளைத் தண்டிக்கக் கோரி குடியரசுத் தலைவர் அலுவலகம் தொடங்கி உள்ளூர் அதிகாரிகள் வரை பலரையும் சென்று பார்த்துவிட்ட இத்தாய், "இந்த அமைப்புமுறை முழுவதுமே ஏழைகளுக்கு எதிரானது என்பதைப் புரிந்து கொண்டு விட்டதாக"க் கூறுகிறார். ஆனாலும், அவர் தளர்ந்து போய் நீதிக்கான தனது போராட்டத்தைக் கைவிட்டு விடவில்லை.



இந்த அடுக்கு மாடிக் குடியிருப்புகள் மகாராட்டிரா மாநில சட்டமன்ற உறுப்பினர்களுக்காக 1983 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இக்குடியிருப்புகளைக் குறைந்த விலையில் அரசிடமிருந்து வாங்கிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்த பல எம்.எல்.ஏ.க்களும், கோடிக்கணக்கான ரூபாய் இலாபத்தில் சட்ட விரோதமாக விற்று விட்டனர். இந்த அடுக்குமாடிக் கட்டிடத்தில் இருக்கும் 242 வீடுகளுள் 153 வீடுகள் தற்பொழுது வெளியாட்களின் கைகளில் சிக்கிக் கொண்டுள்ளன. இம்முறைகேட்டினால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 120 கோடி ரூபாய். இதை விசாரித்துக் குற்றவாளிகளை அடையாளம் காட்டிய மும்பை நகர மாவட்ட ஆட்சியாளரை அப்பதவியில் இருந்து தூக்கி எறிந்து விட்டது பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி. இவரது விசாரணையில் பல எம்.எல்.ஏ.க்கள் தங்கள் வீடுகளை சமூக விரோதிகளிடம் விற்றிருப்பது அம்பலமானது.

வாழும் உரிமை பறிக்கப்பட்ட போதும் சமூக விரோதிகளைத் தண்டிக்கக் கோரி உறுதி குலையாமல் போராடும் நிர்மலா நிகம் ஒருபுறம்; மக்கள் ஊழியர்கள் என்ற போர்வையில் புகுந்து கொண்டு பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்கள் மறுபுறம். இத்தாழ்த்தப்பட்ட தாய் புரிந்து கொண்ட இம் மக்கள் விரோதச் சமூக அமைப்பை நாம் தூக்கியெறிவது எப்போது?